# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

மலர் : 9 | இதழ் :8 | மே : 2025 | ரூ.20/-

Volume : 9 | Issue : 8 | May : 2025 | Rs.20/-


## ஸ்ரீ நரஸிம்ஹர்



# SHRI MAHA MERU MANDALI TRUST

81/1, Mannappa Street, Kottur, Chennai - 600 085.



*2014-ம் ஆண்டு முதல் வேதபாரதியின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஸ்ரீ மஹாமேரு மண்டலி குருஜி அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறோம். முதன் முதலில் வேதபாரதி செய்திகள் மாத இதழ் கலரில் வர வேண்டும் என்றும், அதிக பக்கங்களுடன், இதழ் அதிக உறுப்பினர்களுக்கும் சென்றுசேர வேண்டும் என்ற குருஜியின் ஸங்கல்பம் நிறைவேறி 11 ஆண்டுகளாக தொடர்கிறது. வேதபாரதியின் வளர்ச்சிக்கும் சேவைக்கும், ஸ்ரீமஹா மேரு மண்டலி குருஜியின் ஆசீர்வாதங்கள் என்றும் வேண்டும்.*

என்றும் பணிவுடன்
வேதபாரதி குழுவினர்

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 69

**ப்$^{1}$ரணோ தே$^{3}$வீ ஸரஸ்வதீ$^{1}$ வாஜேபி$^{4}$ர்வாஜிநீவதீ$^{1}$|**
**தீ$^{4}$நாமவித்$^{1}$ர்யவது ||**
**- ரிக் வேதம், மண்டலம் 6, அஷ்டகம் 4,**
**ஸூக்தம் 61, ரிக் 4)**

**பொருள் :**

*பணிவோரைப் பாதுகாக்கும் அறிவே உருவான ஸரஸ்வதி அன்னை நமக்கு அறிவாற்றலையும், சொல்லாற்றலையும், இடைவிடாது அருளிப் பாதுகாப்பாளாக.*

*|| ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ||*

# வேதபாரதி செய்திகள்

**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 9 இதழ்: 8

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 70101 88571

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26
RNI No : 1282188
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| உங்கள் சிந்தனைக்கு | 7 |
| அட்டைப்பட விளக்கம் | 9 |
| வைகாசி மாத விசேஷங்கள் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 12 |
| ஸ்ரீமத் பாகவதம் | 14 |
| ஆதிசங்கரர் | 17 |
| மூதுரை (ஔவையார்) | 20 |
| ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும் | 22 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 25 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 26 |
| தர்மத்தின் குரல் | 27 |
| மூத்தோரே கவனியுங்கள் | 28 |
| பூக்களோடு பேசுவோம் | 35 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 43 |
| வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரை | 47 |
| சிவராத்ரி | 53 |



**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருட சந்தா | ரூ.200 |
| 10 வருட சந்தா | ரூ.1500 |

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI SEITHIGAL**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010246740**
**IFSC : CIUB 0000262**



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 98841 05302, 9443495950**
**94451 02193, 98402 01625**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# பூஜ்யஸ்ரீ நெரூர் சாஸ்தா ஸ்ரீவித்யா சங்கர சரஸ்வதி ஸ்வாமிகள் வழிகாட்டுதலில் சாஸ்தா ப்ரீதி

*கேரள மாநிலம் அச்சங்கோவிலில் சாஸ்தா ப்ரீதி ஏப்ரல் மாதம் 4,5 தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது.*

*ஸ்வாமி ஐயப்பன் எழுந்தருளி கோடிக்கணக்கான மக்களுக்கு அருள்பாலிக்கும் சபரிமலை செல்லும் வழியில் உள்ள அச்சங்கோவிலில் ஸம்ப்ரதாய முறைப்படி ஸ்ரீ சாஸ்தா ப்ரீதி வைபவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.*

*முதல் நாள் 4.04.2025 அன்று ஸ்வாமியை எழுந்தருளச்செய்து ப்ரத்யேக ஹோமங்கள், ஆராதனைகள் வேதவிற்பன்னர்களால் நடைபெற்றது. மாலை 5.00 மணி முதல் சாஸ்தா ஸ்வாமிக்கு ப்ரீதியாக 3000 தேங்காய்கள் இறையருள் பெற்ற ஒருவராலேயே தொடர்ந்து உடைத்து வழிபடும் வைபவமும், பூஜைகளும் நடைபெற்றது.*

*காண்பவர்கள் பரவசம் அடைந்து பக்தியில் கண்ணீர் மல்க பகவான் ஸ்ரீ ஐயப்பனிடம் தன்னை ஒப்படைத்தார்கள். இல்லற கவலைகளை மறந்து ஸ்ரீ சாஸ்தாவிடம் சரணடைந்தார்கள்.*

*மறுநாள் காலை முதல் பகவான் சாஸ்தாவிற்கு எல்லா வகையான, ப்ரசாதங்களும் தயார் செய்து சாஸ்தா ப்ரீதி பாரம்பரிய வழக்கப்படி பூஜைகள், பஜனைகளுடன் நடந்தது. கண்டு களித்த பக்தர்கள் நம்மில் உள்ள இறையாற்றலை உணர்ந்தார்கள். மெய்சிலிர்த்தது. கலந்துகொண்டவர்கள் மிகப்பெரும் பேறுபெற்றவர்களாக உணர்ந்தோம். ஸ்வாமிகள் இரண்டு நாட்களும் நம் நன்மைக்காக தவம் செய்தார்கள். ஸ்வாமிகளின் அணுக்கத்தொண்டர்கள்*

தனது சிறந்த குழுவின் பணிகளால் போக்குவரத்து வசதியே இல்லாத ஊரில் எல்லோரையும் தங்க வைத்து எந்த சிரமமும் இன்றி பிரசாத ஏற்பாடுகள் செய்து மிகநேர்த்தியாக நடத்திக்கொடுத்தார்கள். ஸ்வாமிகள் பிரதிவருடம் ஸாதுர்மாஸ்ய வ்ரதம் அச்சங்கோவிலில் தங்கி அனுஷ்டானம், வ்ரதம் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாக பூஜா மண்டபம், அன்னதான கூடம், சேவார்த்திகள் தங்கும் வசதிகளுடன் புதிய கட்டிடத்தை அச்சங் கோவிலில் ஸ்ரீ ஹரிஹர அர்ச்சண ஸபா நிர்மாணம் செய்துகொண்டுள்ளார்கள்.

நாமும் இப்புனிதப் பணியில் நிதிவழங்கி பேரின்பம் பெறலாம்.

மேலும் தொடர்புக்கு
ஸ்ரீ கிஷன் பட் - *81053 15970*
ஸ்ரீ ஸுதர்ஸன் - *87782 88916*

ஆசிரியர், வேதபாரதி.

## வேதபாரதி செய்திகள் - சித்த மருத்துவ முகாம்



## உங்கள் சிந்தனைக்கு....

## 20. தானத்தில் சிறந்தவன்

பாண்டவர்களுக்கு வெகுநாட்களாக ஒரு சந்தேகம் "நம்முடைய அண்ணன் தர்மரும் தானம் செய்வதில் சிறந்தவர்தானே, ஆனால் எல்லோரும் கர்ணனையே தானம் செய்வதில் சிறந்தவன் என்று கூறுகிறார்களே" என்று

இவர்களுடைய சந்தேகத்தை அறிந்துகொண்ட பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஒரு நாள் ஒரு தங்கமலையையும் ஒரு வெள்ளிமலையையும் உருவாக்கி பாண்டவர்களை அழைத்துச்சென்று "இந்த இரண்டு மலைகளையும் இன்று பொழுது சாய்வதற்குள் தானம் செய்துவிட வேண்டும். அப்படி செய்தால் தர்மர் தானத்தில் சிறந்தவர் என்று நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்கிறேன்" என்றார்.

இதற்கு ஒப்புக்கொண்ட பாண்டவர்களில் பீமனும், அர்ஜுனனும் இரண்டு மலைகளையும் பாளம் பாளமாக வெட்டி எடுத்து தர்மரிடம் கொடுக்க அவர் அவற்றை ஊர் மக்களுக்கு தானம் செய்துகொண்டே இருந்தார். ஆனால் அவர்கள் மலையை வெட்ட வெட்ட அவை வளர்ந்து கொண்டே இருந்தன வெள்ளியும், தங்கமும் குறையவே இல்லை.

உடனே பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கர்ணனை வரவழைத்து "கர்ணா! இந்த தங்க மலையையும், வெள்ளி மலையையும் நீ பொழுது சாய்வதற்குள் தானம் செய்துவிடவேண்டும். பொழுது சாய்வதற்கு இன்னும் ஒரு நாழிகைப் பொழுதே உள்ளது. உன்னால் முடியுமா? என்றார்.

இதைக் கேட்ட கர்ணன் கண்ணா இதில் யோசிக்க

என்ன இருக்கிறது. தாங்கள் கூறியவாறே இப்போதே தானம் செய்துவிடுகிறேன்'' என்று கூறிவிட்டு அங்கிருந்த ஊர் மக்களில் இருவரை அழைத்து "இந்த தங்க மலையையும், வெள்ளிமலையையும் உங்களுக்கு தானமாக அளிக்கிறேன். நீங்கள் இருவரும் ஆளுக்கு ஒரு மலையை எடுத்துக்கொள்ளுங்கள்'' என்று கூறிவிட்டு தன்னுடைய தர்மத்தை முடித்துவிட்டு கண்ணனைப் பார்த்தான்.

பாண்டவர்கள் பிரமித்து நின்றார்கள். அவர்களைப் பார்த்து சிரித்தவாறேகண்ணன் "தர்மருக்கும் தானம் செய்வதில் பரந்த மனதுதான். அதை மறுக்கமுடியாது. ஆனால் தர்மரைக்காட்டிலும் தானம் தர்மம் செய்வதில் பரந்த மனசு உடையவன் கர்ணனே என்பதால் தானத்தில் சிறந்தவர் கர்ணனே என்று அவர்களுக்கு உணர்த்தினார்.

**D. சூரியநாராயணன்**

## உபநயனம் வாழ்த்துக்கள்

கடந்த மாதம் 25.04.2025 வெள்ளிக்கிழமை தாம்பரம் மாடம்பாக்கம் மெயின்ரோடில் அமைந்துள்ள V.M. கிராண்ட் மஹால் மண்டபத்தில் நமது மூத்த உறுப்பினர் ஊரப்பாக்கம் திரு.சுதர்சனம் மற்றும் கலைவாணி தம்பதியினரின் பௌத்ரன் சிரஞ்சீவி A. G. அத்யந்த் (எ) ஹரி நாராயணனுக்கு ப்ரம்ம உபதேசம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் வேதபாரதி அமைப்பின் சார்பாக பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு வடுவை ஆசிர்வதித்தனர்.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# அட்டைப்பட விளக்கம்

## ஸ்ரீ நரஸிம்ஹ ஜயந்தி

*ஸ்ரீமத்பாகவதத்தில் உள்ள 7ஆவது ஸ்கந்தத்தில் உள்ள ப்ரஹலாத சரித்திரம் மிகவும் விசேஷமானது. ஸ்ரீமஹாவிஷ்ணு பகவானின் பல்வேறு அவதாரங்களில் மிகவும் விசேஷமானது ஸ்ரீநரசிம்ஹ அவதாரம். சிறு குழந்தையான ப்ரஹ்லாதனை ரக்ஷிப்பதற்காக கழுத்திற்கு மேல் ஸிம்ஹ வடிவத்திலும் கழுத்திற்கு கீழ் மனித வடிவமுமாக வைசாக சுக்ல சதுர்த்தியில், மாலை நேரத்தில், ஸ்வாதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு ஸ்ரீ நரசிம்ஹ மூர்த்தியாக தூணிலிருந்து அவதாரம் எடுத்தார்.*

*இவ்வுலகத்திற்கு ஸ்ரீநாராயண மந்த்ர மஹிமையை சொல்வதற்காகவும் நாம் மேன்மை அடையவும் ஸ்ரீ நரசிம்ஹ அவதாரம் உலகத்திற்கு கிடைத்தது. மற்றமதங்களுக்கும் நம் ஸனாதன தர்மத்திற்கும் பெரிய வித்யாசம் என்னவெனில், மற்றமதங்களில் இறைவன் இருக்கிறான். அவனைத் தொழவேண்டும், இறைவன் எங்கோ உள்ளான் என்பது நம்பிக்கை, ஆனால் நம் ஸனாதன தர்மத்தின் அடிப்படையே இறைவன் எங்கும் இருக்கிறான். இறைவன் இல்லாத இடமோ, பொருளோ இல்லை. புனிதம் என்று கருதக்கூடிய இடம் மட்டும் இல்லாமல் புனிதமாக கருதாத வஸ்துக்களிலும் இறைவன் உள்ளான்". இதுதான் ஸனாதன தர்மத்தின் மேன்மை.*

*இக்கருத்தை வலியுறுத்தவே* **"இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்"** *என்று ஸ்ரீ நரசிம்ஹ அவதாரம் நமக்கு கூறுகிறது.*

*கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீநரசிம்ஹரை ஸ்ரீநரசிம்ஹர் ஜயந்தியான 11.05.2025*

ஞாயிற்றுக்கிழமையன்று பூஜை, அர்ச்சனை செய்து ஸ்ரீமத் பாகவதம் 7வது ஸ்கந்தத்தில் 10ஆவது அத்தியாயத்தில் உள்ள கீழ்க்கண்ட 10ஆவது ஸ்தோத்திரத்தைச் சொல்லி ப்ரார்த்திப்போம்.

**நமோ பகவதேதுப்யம் புருஷாய மஹாத்மனே/**
**ஹரயே (அ)த்புத ஸிம்ஹாய ப்ரஹ்மணே பரமாத்மனே//**

நிரம்பியவரும், பெரியவரும், பாபங்களை அழிப்பவரும், வ்யாபகமானவரும் ஆச்சர்யகரமான ஸிம்ஹ உருவம் கொண்டவரும் பரப்ரம்ம ஸ்வரூபியுமான உமக்கு நமஸ்காரம்.

**D. சூரியநாராயணன்**

## வாழ்த்துக்கள்

வேதபாரதி உறுப்பினர்களின் பேரன்பு கொண்ட பல்லாவரம் **ஸ்ரீமான் பாலு மாமா தம்பதியரின் 70வது வயது பீமரதசாந்தி** 03.05.2025 அன்று நடைபெற்ற வைபவத்தில் வேதபாரதி நிர்வாகிகள் கலந்துகொண்டு வாழ்த்தவும், வாழ்த்துபெறவும் வாய்ப்பு பெற்றோம். மாமா மாமியின் திருக்கரங்களால் அமுதுசெய்து பலமுகாம்களில் நாம் உணவு பெற்றோம்.


"அன்னதாதா ஸுகி பவா"

வாழ்த்துக்கள்.

99940 89133

99940 89140

**SRI SASTHA CATERING**


We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Varieties on Order


28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

## விசுவாவசு வருஷம் - வைகாசி மாத விசேஷங்கள்

**(மே 15.05.2025 முதல் ஜுன் 14.06.2025 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *16.05.2025* | வை 2 | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி |
| *18.05.2025* | வை 4 | ஞாயிறு | சஷ்டி |
| *23.05.2025* | வை 9 | வெள்ளி | ஏகாதசி |
| *24.05.2025* | வை10 | சனி | சனி ப்ரதோஷம் |
| *26.05.2025* | வை 12 | திங்கள் | அமாவாசை |
| *27.05.2025* | வை 13 | செவ்வாய் | க்ருத்திகை விரதம் |
| *28.05.2025* | வை 14 | புதன் | அக்னி நக்ஷத்திரதோஷ நிவர்த்தி |
| *30.05.2025* | வை 16 | வெள்ளி | சதுர்த்தி |
| *01.06.2025* | வை 18 | ஞாயிறு | ஷஷ்டி |
| *07.06.2025* | வை 24 | சனி | ஏகாதசி |
| *08.06.2025* | வை 25 | ஞாயிறு | ப்ரதோஷம் |
| *09.06.2025* | வை 26 | திங்கள் | வைகாசி விசாகம் |
| *10.06.2025* | வை 27 | செவ்வாய் | பௌர்ணமி, காஞ்சி ஸ்ரீ மஹா பெரியவாள் ஜயந்தி |
| *14.06.2025* | வை 31 | சனி | சங்கடஹர சதுர்த்தி |

### 26.05.2025 திங்கட்கிழமை ஸர்வ அமாவாசை

விசுவாவசு நாம ஸம்வத்ஸரே, உத்தராயணே வஸந்த ருதௌ, ரிஷப மாஸே, க்ருஷ்ணபக்ஷே, சதுர்தஸ்யாம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து க்ருத்திகா நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம் குண ஸகல விஸேஷேண விஸிஷ்டாயாம், அஸ்யாம், சதுர்தஸ்யாம் புண்யதிதௌ.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 72

**த்ரிபாகம் படமானஸ்து கங்காஸ்நாண பலம் லபேத்/**
**ஷடம்சம் ஜபமானஸ்து ஸோம யாகபலம் லபேத்//**

**பொருள் :** *கீதையை மூன்றில் ஒரு பகுதி படிக்கிறவன் கங்காஸ்நான பலனை அடைகிறான். ஆறில் ஒரு பங்கு படிப்பவன் சோமயாகப் பலனைப் பெறுகிறான்.*

## அத்தியாயம் மூன்று
## கர்ம யோகம்...

**யே த்வேதத3ப்4யஸஷுயந்தோ நானுதிஷ்ட2ந்தி மே மதம்/**
**ஸர்வக்ஞானவிமூடா4ன்ஸ்தான்வித்3தி4 நஷ்டானசேதஸ://**
**(கீதை 3-32)**

**பொருள் :** *ஆனால், எந்த மனிதர்கள் என்னிடம் குறைகாண்பவர்களாக என்னுடைய இந்தக் கருத்தை ஏற்று நடப்பதில்லையோ, அந்த மூடர்களை முழுமையான ஞானத்தில் அறிவு மயக்கம் அடைந்தவர்கள் என்றும், சீரழிந்து போனவர்கள் என்றும் அறிந்து கொள்.*

**விளக்கம் :** *பகவான் 31ஆவது ஸ்லோகத்தில் கூறியதற்கு மாறாக இந்த ஸ்லோகத்தில் கூறுகிறார். 'யார் நான் கூறியதை அனுசரிக்காமல் மற்றவர்களிடம் குற்றமும் குறையும் கண்டு தான் செய்வதுதான் சரி' என்று நினைத்து வாழ்கிறார்களோ அவர்கள்* **'ஸர்வக்ஞான விமூடான்'** *அவர்கள் எல்லா ஞானத்திலும் மூடர்கள், அவிவேகிகள். ஆத்ம தத்துவங்களை அறிந்து அவைகளுக்கு ஏற்றபடி வாழ்க்கையை வாழாதவர்கள் நஷ்டத்தையும் கேட்டையும் அடைகிறார்கள்.*

மாயையானது மற்றவர்களை வருத்தும், ஆனால் பக்தனை ஒருபோதும் துன்புறுத்தாது. (உ.ம்) பூனை தன் குட்டியை பற்களால் பிடிக்கும்போது அந்த குட்டிக்கு எந்த தீங்கும் உண்டாகாது. ஆனால் அதே பூனை ஒரு எலியை தனது பற்களால் பிடித்தால் அந்த எலி இறந்து போகும்.

அடுத்துவரும் 33, 34, 35 ஆகிய மூன்று ஸ்லோகங்களிலும் ஞானிகள் அஞ்ஞானிகள் ஆகியோரின் பேருண்மைகள் என்ன என்பதை பகவான் விளக்குகிறார்.

**ஸத்3ருசம் சேஷ்ட ஸ்வஸ்யா : ப்ரக்ருதேர்ஞானவானபி/**

**ப்ருக்ருதிம் யாந்தி பூ4தானி நிக்3ரஹ கிம் கரிஷ்யதி//**

**(கீதை 3-33)**

**பொருள் :** ஞானியும் தன் இயல்புக்கு ஏற்றபடி நடக்கிறான். உயிர்கள் அவற்றின் இயல்பைப் பின்பற்றுகின்றன. தடை செய்வதால் ஆவெதன்ன?

**விளக்கம் :** உலகில் உள்ள சகல ஜீவராசிகளும் அதாவது மரம், செடி, கொடி, பறவைகள், மிருகங்கள் அனைத்தும் அதனதன் இயற்கை குணங்களின் படியேதான் செயல்புரிகின்றன. மாமரம் இனிமையான மாம்பழத்தைத்தான் கொடுக்கும். வேப்ப மரம் கசப்பான பழத்தைத்தான் கொடுக்கும். அவற்றின் வளர்ச்சியைத் தடுப்பதால் பயன் ஏதும் இல்லை. இதுபோல் மனிதர்களிடையே ஞானிகள் விருப்பு வெறுப்பு இல்லாமல் தூய இயல்புடன் செயல்படுகிறார்கள். ஆனால் அஞ்ஞானிகளான பாமரர்களால் சாஸ்திர நியமங்களுக்கு ஏற்ப செயலாற்றமுடிவதில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இயல்பு உண்டு. அவர்களை பலவந்தபடுத்துவதில் பலன் இல்லை.

தொடரும்.....

# ஸ்ரீமத் பாகவதம்

(ஸத்யம் பரம் தீமஹி)

பரிதி பகுதி - 50

## ஸ்கந்தம் – 5

## "அஜாமிளன்" சரித்திரம்

*ஸ்ரீமத் பாகவதத்தில் 5ஆவது ஸ்கந்தத்தில் 15ஆவது அத்தியாயத்துடன் ஜடபரதரின் வம்சம் முடிவடைகிறது. அதன்பிறகு அத்தியாயம் 16 முதல் அத்தியாயம் 26 வரையிலும் ஸ்வர்க, நரகாதி வர்ணனைகள் கூறப்பட்டுள்ளன. இந்த 26ஆவது அத்தியாயத்துடன் 5வது ஸ்கந்தம் முடிவடைகிறது. அதன்பிறகு 6ஆவது ஸ்கந்தம் ஆரம்பமாகிறது.*

*ஸ்ரீமத் பாகவதத்தில் மொத்தம் 12 ஸ்கந்தங்கள் உள்ளன. ஸ்ரீமத் பாகவதத்தை ஒரு அழகிய மாலை என்று வைத்துக்கொண்டால் அந்த மாலையின் நடுவில் இருக்கும் பதக்கம்போல் விளங்குவது இந்த 6ஆவது ஸ்கந்தம்.*

*இந்த 6வது ஸ்கந்தத்தில் ஹரி நாம மஹிமையை வலியுறுத்தும் வண்ணம்* **"அஜாமிளன்"** *கதை, புகழ்பெற்ற ஸ்ரீநாராயண கவசம், வ்ருத்தாசூரனின் கதை, சித்ரகேதுவின் கதை, பும்ஸுவன விரதத்தின் செயல்முறைஆகியவை விவரிக்கப்படுகின்றன.*

*யாரெல்லாம் பகவானுடைய நாமத்தை விடாமல் ஜபிக்கிறார்களோ அவர்களுக்கு எந்த பயமும் கிடையாது. யமலோக பிராப்தியும் கிடையாது. ஒரே ஒரு முறை மனது பகவானுடைய பாதாரவிந்தத்தில் சரணடைந்துவிட்டால் அந்த பக்தன் கனவிலும் யமலோகத்தையோ, எமனையோ பார்க்கமாட்டார். பகவான் நாமத்தில் நம்பிக்கை வந்துவிட்டால் இந்த ஜன்மா கரையேறிவிடும். ஒருவன் இறக்கும்*

தருவாயிலாவது பகவானுடைய நாமத்தைச் சொன்னால் அவனது அனைத்து பாவங்களும் நொருங்குகின்றன. அந்த நாம மஹிமையைப் பற்றி கூறுவதுதான் **“அஜாமிளன்”** கதை. இனி கதைக்குச் செல்வோம்.

**“அஜாமிளன்”** சரித்திரம் ஸ்ரீமத் பாகவதத்தில் 6ஆவது ஸ்கந்தத்தில் முதல் அத்தியாயத்தில் 21ஆவது ஸ்லோகம் முதல் 68 வரையிலும், மற்றும் 2ஆவது அத்தியாயத்தில் 1 முதல் 49வது ஸ்லோகம் வரையிலும் விவரிக்கப்பட்டுள்ளது.

**“கான்ய குப்ஜே”** என்றநகரத்தில் **“அஜாமிளன்”** என்றபெயருடைய ஒரு பிராமணன் வசித்துவந்தான். (**“அஜாஹா”** என்றால் “பிரம்மன்” அழிவில்லாதது என்று பொருள்) அவன் ஒரு பிராமண குலத்தில் பிறந்தவன். அக்குலத்தில் விதிக்கப்பட்ட கர்மங்களை ஒழுங்காக செய்துகொண்டிருந்தான். அவன் ஒரு நாள் **“தர்பை”** சேகரிக்க காட்டிற்குச் சென்றபோது ஒரு வேசியைக் கண்டான். அவளுடைய அழகில் மயங்கி தன்னையும் தன் குடும்பத்தையும் மறந்து அவளுடன் வாழ ஆரம்பித்தான். அவர்களுக்கு பத்து குமாரர்கள் பிறந்தார்கள். அவர்களில் கடைசிக்குழந்தைக்கு **“நாராயணன்”** என்று பெயர் சூட்டினான். தன் குழந்தைகளைக் காப்பாற்ற வழிப்பறி, கொள்ளை, கொலை ஆகியவற்றில் ஈடுபட்டான்.

தன் கடைசி குழந்தைக்கு **“நாராயணன்”** என்று பெயர் சூட்டியதாலோ என்னவோ அஜாமிளனுக்கு அவன்மீது அளவற்றபாசம் உண்டாயிற்று. எப்போதும் **“நாராயணா”** **“நாராயணா”** என்று தன் மகனை அழைத்துக்கொண்டே இருந்தான்.

அஜாமிளன் வயோதிகத்தை அடைந்தான். அந்திம காலம் வந்தது. உடல் மெலிந்து மரணப்

படுக்கையில் கிடந்தான். உயிர் அடங்கிக் கொண்டிருந்தது. மூன்று யமதூதர்கள் கோரமான உருவத்துடன் அஜாமிளனின் சூஷ்ம சரீரத்தை எடுக்க வந்துவிட்டார்கள்.

உயிர் பிரியும் அந்த நேரத்தில் அஜாமிளனுக்கு தன் கடைசி குமாரனைக் காணவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. தன்னுடைய முழுசக்தியையும் திரட்டி, தூரத்தில் விளையாடிக்கொண்டிருந்த தன் கடைசி பிள்ளையைப் பார்த்து **“நாராயணா, நாராயணா,** என்று அழைத்தான்.

**(ப்லாவிதேன ஸ்வரணோச்சை: ஆஜுஹாவ ஆகுலேந்த்ரிய://= புலன்கள் கலங்கிய அவர் மூன்று மாத்திரை கொண்ட குரலால் உரக்க கூப்பிட்டான்” என்கிறது பாகவதம் (6-1-29)**

அவனது குரல் அவன் குழந்தைக்கு கேட்கவில்லை. ஆனால் வைகுண்டத்தில் உள்ள பகவானுக்கு கேட்டது. உடனே அடுத்த வினாடி 4 விஷ்ணு தூதர்கள் அஜாமிளன் முன் தோன்றினார்கள். அவர்களைப் பார்த்ததும் யமதூதர்கள் செய்வதறியாது திகைத்தனர். பாசக்கயிற்றைப் போட்டு உயிரை இழுக்கும் யமதூதர்களைத் தடுத்தனர். அப்போது யமதூதர்கள் விஷ்ணு தூதர்களை வணங்கி, “ஐயா, இவன் பெரும் பாவி, இவன் தன் ஆயுட்காலத்தில் செய்யாத பாபங்களே கிடையாது. இதுவரை இவன் செய்த பாவங்களுக்கு ப்ராயசித்தம் செய்து கொள்ளவில்லை. இவன் தண்டனைக்குரியவன் ஆகவே நாங்கள் இவன் உயிரை எடுத்துச் செல்லவேண்டும் என்றார்கள்.

ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

**ஆதவன்** **பகுதி 42**

## அத்தியாயம் 17
## (தோடகாஷ்டகம்)

*சென்றமாத தொடர்ச்சி..*

*கிரி நதிக்கரையில் தன் வேலையை முடித்துக்கொண்டு ஸ்ரீசங்கரர் இருக்கும் இடத்திற்கு வந்து ஸ்ரீசங்கரரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து* **"தோடகம்"** *என்ற சந்தத்தில் ஸ்ரீ சங்கரரின் பெருமைகளை வெளிப்படுத்தும் ஒரு திவ்ய ஸ்தோத்திரத்தைப் பாடினான். அதுதான் எட்டு ஸ்லோகங்களைக் கொண்ட* **"தோடகாஷ்டகம்".**

*அநேக வாசகர்களுக்கு* **"தோடகாஷ்டகம்"** *ஸ்லோகங்கள் தெரியும் என்ற காரணத்தால் இங்கு முழு ஸ்லோகத்தையும் போடாமல் ஆரம்ப வரியை மட்டும் போட்டுட்டு முழு ஸ்லோகத்துக்குண்டான பொருளை மட்டும் பதிவிடுகிறேன்.*

**1. விதிதாகில ஸாஸ்த்ர ஸுதாஜலதே....................**

*ஹே ஜகத்குரு : பாற்கடலைப் போன்றசாஸ்த்ர கடலை கற்றுணர்ந்தவரே! உபநிஷத் என்னும் பெரும் பொக்கிஷத்தின் பொருளை உலகுக்கு உணர்த்தியவரே! என்றும் என் இதயகமலத்தில் வைத்துப் போற்றும் உமது விமலமான பாதங்களிடம் சரணடைகிறேன். நீரே அடைக்கலம்– ஹே சங்கர தேசிகா:*

**2. கருணாவரு ணாலய பாலய மாம் ........................**

*கருணைக்கடலே! பிறவியினால் உண்டான துன்பக்கடலிலிருந்து காப்பாற்றுங்கள். தத்வ ஞானத்தை*

*நான் அறிந்துணர அருளுங்கள். நீரே அடைக்கலம் – ஹே சங்கர தேசிகா:*

**3. பவதா ஜனதா ஸுகிதா பவிதா ...................**

*தங்களாலேதான் ஜனங்கள் ஆத்மானுபவம் பெற்று சுகமடைகின்றனர். சந்தோஷமடைகின்றனர் (நிஜ போத விசாரண) ஜீவனைப்பற்றிய உண்மையை உணர்வதில் சிரேஷ்டரே! எனக்கும் ஜீவ ப்ரம்ம பந்தத்தை உணரும் ஞானத்தை பெறச்செய்யுங்கள்... நீரே அடைக்கலம்– ஹே சங்கர தேசிகா;*

**4. பவ ஏவ பவாநிதி மே நிதராம் ஸமஜாயத .......**

*ஹே ஜகத்குரு! நீரே எல்லாம் எனக்கு – என் இறைவனே நீர்தான் என்று உணரும்போது எனக்கு பரம சாந்தியும், சந்தோஷமும், நிம்மதியும் ஏற்படுகிறது. எல்லையில்லாத அஞ்ஞானக் கடலிலிருந்து (மோஹமஹாஜலதீம்) நீரே என்னை காப்பாற்றவேண்டும். நீரே அடைக்கலம் – ஹே சங்கர தேசிகா:*

**5. ஸுக்ருதே திக்ருதே பஹுதா பவதோ பவிதா ...............**

*பலவிதமான அனுஷ்டான ஆசாரங்களை உணர்ந்து செய்யும் போதுதான் தன்னையே உணரும் ஆவல் பிறக்கிறது. அதி தீனமிமம் பரிபாலய – மிகவும் தீனனான என்னை காப்பாற்றுங்கள். எனக்கும் அதை உணர்த்துங்கள் - நீரே அடைக்கலம் - ஹே சங்கர தேசிகா:*

**6. ஜகதீமவிதும் கலிதாக்ருதயோ..............................**

*ஹேகுருவே! தெய்வம் பல வடிவத்திலும், வேஷத்திலும் உலகைக்காக்க உலவுகிறது. அந்த வடிவங்களிலெல்லாம் சூரியனைப்போன்று பிரகாசிப்பவரே - நீரே அடைக்கலம் – ஹே சங்கர தேசிகா:*

**7. விதிதா ந மயா விஸதைக்கலா ந ச கிஞ்சன காஞ்சன....**

சிரேஷ்டமான குருவே! ரிஷபத்தை சின்னமாக கொண்ட இறைவா! உமக்கு ஈடு எவருமில்லை. அடைக்கலமானவர்களுக்கு சரணாகதி அளிப்பவரான தத்வ பொக்கிஷமே... நீரே அடைக்கலம்... ஹே சங்கர தேசிகா.

**8. குருபுங்கவ புங்கவகேதன தே ஸமதாமயதாம் ......**

ஞானத்தின் ஒரு பகுதிகூட என்னால் முழுவதுமாக பிழையின்றி கற்கப்படவில்லை. கல்வி செல்வத்தின் ஒரு துளிகூட என்னிடம் இல்லை. ஹே குரு! உமது பரம கருணையினாலே என்னை ஆசீர்வதியுங்கள். நீரே அடைக்கலம் – ஹே சங்கர தேசிகா.

கிரி இந்த ஸ்தோத்திரத்தை பாடி முடித்ததும் எல்லோரும் வியந்தார்கள். ஸ்ரீ சங்கரர் கிரியிடம் நீ விவேகம், வைராக்கியம், மனவடக்கம், புலனடக்கம், சிரத்தை, முமுக்ஷுத்வம் முதலான ஸாதனா ஸம்பாதிக்க வேண்டும்" என்று கூறி கிரிக்கு ஸந்யாஸம் கொடுத்து "தோடகாசார்யர்" என்றநாமத்தைச் சூட்டினார்.

யாத்திரை தொடரும்...


**புதிய கணக்கு எண்**

**வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட்**

**வேதபாரதி - வேதவகுப்பிற்கான வங்கி கணக்கு எண்கள் விபரம்**

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010268668<br>Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

**80G Approved**

## ஔவையார்

*(பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டது)*

நம்முடைய புண்ணிய பூமியில் மனிதர்களிடம் சமத்துவம் ஏற்பட வேண்டும் என்று, அத்வைத தத்துவத்தை உபதேசித்தவர் ஜகத்குரு ஸ்ரீ ஆதிசங்கரர். அவருடைய அம்சமாக அவதரித்து, பக்தர்களால் **"நடமாடும் தெய்வம்''** என்று போற்றி வணங்கப்பட்டவர் காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவா.

ஸ்ரீ மஹாபெரியவா, ஸ்ரீ சங்கரர் சொன்ன விஷயங்களையும் மற்றும் ஏராளமான ஆன்மீக தத்துவங்கள், வரலாறுகள் போன்றவற்றைமனிதர்கள் வாழ்வில் தெரிந்து கொள்வதற்காக எளிய தமிழில் வழங்கியுள்ளார். அவை **"தெய்வத்தின் குரல்''** என்றபெயரில் புத்தகமாக வெளிவந்துள்ளது நாம் அறிந்ததே. அந்த "தெய்வத்தின் குரலில் மஹாபெரியவா ஔவையாரைப் பற்றி கீழ்க்கண்டவாறு அழகாக கூறியுள்ளார்.

"ஔவையாரைவிட தமிழ் நாட்டுக்கு உபகாரம் செய்தவர் யாரும் இல்லை. ஆயிரம் காலமாக இந்த தேசத்தில் ஒழுக்கமும், பக்தியும் இருந்து வந்திருக்கிறது என்றால் அதற்கு முக்கியக் காரணம் ஔவையார்தான்.

குழந்தைகளாக இருக்கும்போதே நல்ல ஒழுக்கத்தையும், பக்தியையும் உண்டாக்கிவிட்டால் தான், பிறகு அவை நிலைத்து நிற்கும். தமிழ் நாட்டில் எத்தனையோ மகாகவிகள் பக்தர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பாடியது முக்கியமாகப் பெரியவர்களுக்குத்தான். ஔவையாருக்கு அவர்களைவிடக் கவிதா சக்தியோ, பக்தியோ குறைச்சல் இல்லை. அவள் ரொம்பப் பெரியவள், ஞானி, யோக சாஸ்திரத்தில் கரை கண்டவள். ஆனாலும் அவள் குழந்தைகளை

நல்லவர்களாக்க வேண்டும் என்பதில் முக்கியமாக கவனம் வைத்து அவர்களுக்கு நல்ல குணங்களையும், ஒழுக்கத்தையும், நீதியையும், தெய்வ பக்தியையும் போதனை செய்து பாடினாள்.

பேரக்குழந்தைகள் நன்றாக இருக்க வேண்டுமே என்று கரிசனத்தோடு ஒரு பாட்டி நல்லது சொல்லுவது மாதிரி ஔவைப் பாட்டி அத்தனை தமிழ் குழந்தைகளுக்கும் உபதேசம் செய்தாள். அவளுடைய அன்பின் விசேஷத்தால் அவளுக்கப்புறம் எத்தனையோ தலைமுறைகள் ஆனபிறகும் இப்போதும் நாம் குழந்தையாகப் படிக்க ஆரம்பிக்கிறபோதே அவளுடைய “ஆத்திசூடி” தான் முதலில் வருகிறது.

முதல் பூஜை பிள்ளையாருக்கு, முதல் படிப்பு ஔவையார் பாடல்.

தொகுப்பு : **பரிதி**

இந்தப் பகுதி தொடர்ந்து வெளிவர ஆதரவு தருபவர்

**ப்ரம்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்,**

வேளச்சேரி

**Er. D.A. Devapaull**
Managing Director

**STAR BUILDERS AND DEVELOPERS**
*... we build your dreams*

C-95, Thally Hudco
Hosur - 635 109.
starbuildershosur@gmail.com

**D.A. Devapaull**
DPT, Trainer

**STAR GYM & FITNESS CENTRE**

#2, Renuga Devi Complex,
ESI Ring Road,
Muniswar Nagar,Hosur.

**We are specialised in :**
Industrial & Commercial Buildings
Residential Buildings, Apartments & Villas
Road Works & Layout
Approval Drawings & Structural Design
Star Earth Movers & Constriction Material Suppliers





- Weight Loss
- Weight Gain
- Fitness Training
- Strength Training
- TRX Training

**Cell : 94421 02057 / 70106 23102**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா

# ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும்



நாராயணன் பகுதி 8

## அத்தியாயம் — 4
## கோவிலின் அமைப்பு

ஸ்ரீ நாராயண பட்டதிரி ஸ்ரீமன்நாராயணீயம் எழுதிய இடத்திலிருந்து உள்ளே நுழைந்தால் பகவானின் கர்ப்பகிரஹம் தெரியும். மூலஸ்தானத்தின் இருபுறமும் **"சண்டன் மற்றும் பிரண்டன்"** (துவார பாலகர்கள்) அனந்தானந்தர்கள், மூலஸ்தானப் படிக்கட்டுக்கு கீழே இந்திரனும், கருடனும் உள்ளார்கள்.

கர்ப்பகிரகத்தின் உள்ளே மூல விக்ரஹம் உள்ளது. அதன் பின்னால் சாளக்ராமங்கள் அடங்கிய பெட்டி உள்ளது. கர்ப்பகிரஹத்தின் உள்ளே ஸ்ரீ குருவாயூரப்பனின் இரண்டு **"திடம்புகள்"** உள்ளன. **"திடம்பு"** என்றால் தங்கம் மற்றும் பஞ்சலோகத்தால் ஆன சிலைகள். சுவாமி ஊர்வலத்தில் எடுத்துச்செல்வது.

கர்ப்பகிரஹத்தைச் சுற்றி கர்ப்பக்கிரஹத்தை தொடாமல் இருக்கும் கட்டடங்களை **"நாலம்பலம்"** என்பார்கள்.

தென்கிழக்கு மூலையில் "அக்னி'' உள்ளார். இங்குதான் கோவிலின் **"திடப்பள்ளி''** அதாவது **"மடப்பள்ளி"** அமைந்துள்ளது. இங்குதான் பகவான் ஸ்ரீகுருவாயூரப்பனுக்கு தினமும் சமர்ப்பிக்கும் பாயசம்

போன்ற நெய்வேத்தியங்கள் தயாரிக்கப்படுகின்றன. தினசரி பூஜைக்கு வேண்டிய பொருட்களும் இந்த இடத்தில்தான் சேமித்து வைக்கப்படுகிறது. இதே இடத்தில்தான் தினமும் விடியற்காலை 5.30 மணிக்கு **“கணபதி ஹோமம்”** நடைபெறும்.

அடுத்து தென்மேற்கில் **“கன்னிமூலையில்”** உபதேவதையான கணபதி ஸந்நிதானம் உள்ளது. அதன் வட பகுதியில் பகவான் ஸ்ரீ குருவாயூரப்பனுக்கு தினமும் அலங்கரிக்க சந்தனம் அரைக்கப்படுகிறது. கணபதி சந்நிதானத்திலிருந்து வெளியே வந்தால் வடபகுதியில் ஒரு சுவற்றில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட அழகிய திருவனந்தபுரம் அனந்தபத்மநாபன் சிலை இருக்கும். இங்குதான் பகவானுக்கு மாலை கட்டுகிறார்கள்.

நாலம்பலத்திலிருந்து வெளிப்பிரகாரம் செல்லும் வழியில் வலப்புறம் உள்ள திண்ணையில் “நிருத்தம்” என்ற இடத்தில் “வில்வமங்கள ஸ்வாமிகள் (இவர் குறித்து பின்பு பார்ப்போம்) நிஷ்டையில் அமர்வது வழக்கம். இரவு திருப்புகை தரிசனம் முடிந்தும் பகவான் ஸ்ரீகுருவாயூரப்பன் அவருக்கு காட்சி அளிப்பாராம். இந்த இடத்தில்தான் தினமும் கோவில் வரவு செலவு கணக்குகளை வாரியர் குலத்து நபர் படிக்க பகவான் ஸ்ரீகுருவாயூரப்பன் கேட்பதாக நம்பிக்கை.

தொடரும்...


ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

**யோகா வகுப்புகள்** (30 நிமிடங்கள்)

**வாரம் 2 நாட்கள் by Online**

செவ்வாய், வியாழன் – காலை 6.00 மணி
சனி, ஞாயிறு – காலை 6.00 மணி

ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**
திருச்சி

யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்

தொடர்புக்கு :
**9443495950 / 9443453053**


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
WOPPER

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

# சாஸ்திரமே ப்ரமாணம்



தர்மம் என்பது உலக நன்மைக்காகச் செய்யப்பட வேண்டியது. கொஞ்சம்கூட சொந்த விருப்பு, வெறுப்பு இல்லாமல், அனைத்து உயிர்களும் நலமுடன் இருக்க வேண்டும் என்ற ஒரே சிந்தனையோடு மகான்கள் தர்ம நூல்களைத் தந்திருக்கிறார்கள். எது தர்மம் என்று தீர்மானம் பண்ணுபவையே தர்ம சாஸ்திரங்கள். உருவத்தை அறிவதற்குப் ப்ரமாணம் கண்; சப்தத்தை அறிவதற்குப் ப்ரமாணம் காது, அதேபோல, தர்மத்தை அறிவதற்குப் ப்ரமாணம் தர்ம சாஸ்திரம் சொல்வதுபோலச் செய்வதே ஆகும்.

ஆன்மிக, தார்மிக, மத விஷயங்களில் ப்ரமாணங்களைக் கொள்ளும் முறையில் முதலில் வேதம் இடம்பெறவேண்டும். அடுத்ததாக தர்ம சாஸ்திரத்தைக் கொள்ள வேண்டும். அதையடுத்து, பூர்வகால ரிஷிகள் முதலியோரின் நடத்தை. பின்னர், தற்காலத்திய சிஷ்டர்களின் ஆசாரத்தைப் ப்ரமாணமாகக் கொள்ள வேண்டும். இவற்றுக்கெல்லாம் பின்னர், கடைசி கடைசியாகத்தான் மனசாட்சியைப் ப்ரமாணமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

## நிலையற்ற வாழ்க்கை

சென்றமாத தொடர்ச்சி....




பிறகு தேவர்கள் அகஸ்திய முனிவரை நாடிச் சென்று, 'தாங்கள் தயவு செய்து, அசுரர்கள் மறைந்திருக்கும் இந்தக் கடலை வற்றச் செய்ய உதவ வேண்டும். இச்செயல் எங்கள் சக்திக்கு அப்பாற்பட்டது" என்று கேட்டுக் கொண்டார்கள். அகஸ்திய முனிவர் சர்வசாதாரணமாக, ஏதோ பாலைக் குடிப்பதைப்போல் கடல் நீர் முழுவதையும் ஒரே மூச்சில் குடித்துவிட்டார். அங்கே மறைந்து கொண்டிருந்த அசுரர்கள் வெளியே தென்பட்டதால், அவர்களைக் கொன்று தேவர்கள் வெற்றி வாகை சூடினார்கள்.

நினைத்துப் பார்க்கவும் முடியாத அளவிற்கு பேராற்றல் கொண்டு விளங்கிய அகஸ்தியர், விச்வாமித்திரர், வசிஷ்டர் போன்ற பெரிய மஹரிஷிகளும், மரணத்திற்கு இலக்காகி, இன்று இல்லாமல் போய்விட்டார்கள். ஆகையால், பிறவி எடுத்தவனுக்கு மரணம் என்பது தவிர்க்க முடியாததாகும்.

பாண்டவர்கள் காட்டில் வசித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஒருநாள், அவர்களுக்குத் தாங்க முடியாத தாகம் ஏற்பட்டது. அப்பொழுது நகுலன் ஒரு மரத்தின் மீதேறி, எங்கேயாவது நீர்நிலை தென்படுகிறதா என்று சுற்றும் முற்றும் தேடிப் பார்த்தான்.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*நிறைவுபகுதியின் சென்றமாத தொடர்ச்சி :*

*எல்லா நற்பண்புகளும் இறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டவை (2.14(16)). வாழ்க்கையின் சுகதுக்கங்களுக்கிடையேயும் சமநிலை காணும் சக்தி, மறுபிறவியின் மீதான நம்பிக்கையிலிருந்து தோன்றுகிறது. இம்மூன்று நம்பிக்கைகளும் கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். அவை, வெறியால் பின்பற்றப்படும் பிடிவாதக் கொள்கைகள் அல்ல. அவை நிரூபிக்கப்பட்ட கொள்கைகள். இந்த சிந்தனையோடு, நிலையான அமைதிக்கும் க்ஷேமத்திற்கும் வேதங்கள் நமக்கு எப்படி வழிகாட்டுகின்றன, என்பதை நாம் இப்பொழுது விவாதிப்போம். சரியான செயல் என்பது என்ன, எது தவறான செய்கை, அதை யார் முடிவு செய்கிறார், எப்படி முடிவு செய்கிறார் என்பனவே முக்கியமான விஷயங்கள் இவ்விஷயங்களை நாம் படிப்படியாக விவாதிப்போம்.*

**1. நாம் மகிழ்ச்சிக்காக உழைக்கிறோம் :**

*தூங்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களிலெல்லாம், நாம் இடைவிடாது செயல்பட்டுக் கொண்டே இருக்கிறோம். ஏதாவது ஒரு வேலையைச் செய்யாமல் ஒரு நொடி இடைவெளிகூட யாரும் இருப்பதில்லை.*

*தொடரும்...*

# மூத்தோரே! கவனியுங்கள்!

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 4 பகுதி - 5

## அத்தியாயம் — 5

எந்த வயதிலும் உடல் நலம், மன நலம், பண பலம் இம்மூன்றும் நமக்கு தேவை தான். ஆனால் முதுமை என்பது 60 வயதில் "டாண்" என்று வருவதில்லை.

70 வயதை நெருங்கும் பொழுது தான் அனைத்துவித சிக்கல்களையும் நாம் சந்திக்கின்றோம். ஏதோ ஒரு பாகம் நம் உடல் மூலமாக நம் அறிவுக்கு, "உனக்கு வயதாகி விட்டது ஜாக்கிரதை" என்று கூறத் துவங்குகிறது.

அன்றைய காலகட்டத்தில் 50 வயதிற்குள் கடமையை முடித்துவிட்டு, கணவரின் சஷ்டியப்த பூர்த்தி முடிந்தவுடன் இடுப்பு சாவி கொத்தை தன் மருமகளிடம் கொடுத்துவிட்டு, அமர்நாத் Tour கிளம்பி போகிறவழியில் எங்கு உயிர் பிரிந்தாலும் சரியென்று கவலையற்றவாழ்க்கையை வாழ்ந்தனர்.

இன்று 60 லிருந்தே, "என்னது, ரிடையர்மெண்ட்டா? இன்னும் "எக்ஸ்டென்ஷன்" (Extension) கிடைக்கும் சார்" என்று பணம், பதவி, கௌரவம் அவசியம் கருதி பணிக்கு செல்வதும் அதிகமாக உள்ளது.

மற்றொரு வகை, இதுநாள் வரை குடும்பத்திற்கு உழைத்தாகிவிட்டது. இனி ஊர், உலகிற்கு இந்த சமுதாயம் மூலமாக ஏதாவது செய்ய வேண்டாமா? அதனால் அந்த க்ரூப், இந்த க்ரூப்ல இருக்கேன்" என்று

பல பெயர்களை கூறுவார்கள்.

வேறொரு வகை, பென்ஷன், பிஃஎப் என்று அலைந்துவிட்டு, “இனி நான் உண்டு, என் சாய்வு நாற்காலி உண்டு, என் தினசரி பேப்பர் கையிலுண்டு என்று சுகமான வாழ்க்கை வாழ விரும்புவர்.

“இதோ பாருங்கோ, நானும் ஓடி, ஓடி உழைத்தாகி விட்டது. எனக்கும் வயசாகிவிட்டது. காபி கலந்து வெச்சிருக்கேன். எடுத்து சாப்பிடுங்கோ. நான் நாராயணீயம் கிளாஸ், பகவத்கீதை கிளாஸுக்கு போகணும்” என்று மனைவி சிடுசிடுத்தவுடன் தான் மனைவிக்கும் வயதாகி விட்டது எனும் நினைப்பு வரும்.

காதோடு உறவாடிய அன்றைய தொலைபேசியும், இன்றைய அலைபேசியும் நம்மை லட்சியம் செய்வதில்லை. அன்று குழந்தைகள் பேச வேண்டும் என்று ஆசையாக ஓடி வருகையில் நம்மிடம் நேரமில்லை. இன்று அவர்களிடம் பேச நாம் துடிக்கையில் அவர்களுக்கு நேரமில்லை.

எத்தனை நேரந்தான் டி.வி. பார்ப்பது? எத்தனை முறைபேப்பர் படிப்பது? பேரக்குழந்தைகள் தான் நமக்கு “பொழுது போக்கு அம்சம்” (Entertainment Source). நம் உறவினர்கள் அனைவருக்கும் வயதாகிவிட “வம்பு” பேச யாருமில்லை. பேரக்குழந்தைகளை கவனிக்கத் துவங்கினால் தவறுகள் அனைத்தும் பூதக்கண்ணாடி மூலம் பூதாகாராமாகத்தான் தெரியும்.

“அப்போ, நாங்க எதையும் கண்டுக்காமல் இருக்கணுமா?” என்று நீங்கள் என்னிடம் சண்டைக்கு வருவது என் மனக்கண்களில் தெரிகின்றது.

“கவனிக்கணும் ஆனால் கவனிக்காத மாதிரி இருக்கணும். குற்றங்கூறும் உரிமை பாட்டி தாத்தாவுக்கு

முழு உரிமையுண்டு. ஆனால் கூறுவது தெரியக்கூடாது. மகள் (அ) மருமகளிடம் வாழைப்பழத்தில் ஊசி குத்துவது போன்று இருக்க வேண்டும்.

இன்றளித்த "அட்வைஸ்" அடுத்தகணம் முதல் நிறைவேற்றப்பட வேண்டுமென்று பிடிவாதமாக இருக்கக்கூடாது. அதேசமயம் நிறைவேற்றுகிறார்களா என்று ஓரக்கண்ணால் கவனித்தால் போதுமானது.

"எங்கள் பெயரை எடுக்காதே. இதுதான் "அட்வைஸ்" நீங்களே பேசி முடிவெடுத்து எப்படி செயல்பட வேண்டுமோ அப்படி செயல்படுத்துங்கள்" என்று ஒதுங்க வேண்டும்.

இதற்கு பொறாமை, நான் எனும் அகங்காரத்தை முதலில் பாட்டி தாத்தாக்களான நாமல்லவா நம்மிடமிருந்து களைந்தெடுக்க வேண்டும்.

**"பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு ஊதியம் போக விடல்". (அதிகாரம் – 84, குறள் – 831)**

"கேடு விளைவிப்பது, நமக்கு நன்மை தருவது எது? என்று தெளிவாக அறிய வேண்டுமல்லவா? அத்தெளிவடையாமல், நன்மையை விடுத்து தீமையை நாடுவதே பேதைமை" என்கிறார் வள்ளுவர் பெருமான்.

தொடரும்...

## வேதவகுப்பு

வேதவகுப்புகள் சேர்வதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

94451 02193 / 9994926537 / 98402 01625

வார இறுதி நாட்கள் யஜுர் வேத வகுப்பு ஆரம்பமாகி உள்ளது. இணைந்து பயன்பெற வேண்டுகிறோம்.

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- Breast Pumps
- Blood Glucose Meters
- BP Meters
- Alpha Beds
- Adult Diapers
- Under Pads
- Wheel Chairs
- Physio Products
- Home Sleep Study
- Oxygen Concentrator
- CPAP / Bi Pap
- Pulse Oxymeters
- Nebuliser
- Morning Walker
- Weighing Scale
- Air Purifier




முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.

#174, 26th East Street, Kamaraj Nagar,
Tiruvanmiyur, Chennai - 600 041.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

## நீர், மோர் வழங்கும் நிகழ்ச்சி



## பெண்மையைப் போற்றுவோம்





வேத பாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## வேதபாரதி விவாஹ சேவை - புதுச்சேரி

புதுச்சேரி வேதபாரதி கடந்த ஆறாண்டுகளாக மேட்ரிமோனி சேவையை செய்து வருகிறது. இதன் பலனாக பலரது வாழ்வில் திருமணம் நடைபெற்று வசந்தம் மலர்ந்துள்ளது.

திருமண வயதை கடந்து மணமாகாத பலர் பிராமண சமுதாயத்தில் இருக்கின்றனர். இதனால் பிராமண சமூகத் தொகை குறைந்து வருவதோடு எதிர்காலமும் அபாயத்தை நோக்கி நகர்கிறது. அவர்களுக்கும் சீக்கிரத்தில் விவாஹம் நடைபெறவும், பிராமண சமூகம் தழைக்கவும்,

சேவையையே நோக்கமாக கொண்டு செயல்படும் வேதபாரதி மேட்ரிமோனியில் தங்களது மணமாகாத வரன் மற்றும் வதூ ஜாதகங்களை பதிவு செய்து பிராமண சமூகம் தழைக்கச் செய்யுங்கள். பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் ஜாதகப் பதிவு நேரிடையாகவும் செய்யலாம்.

பதிவிற்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்.

**6380440194 / 9443284439**

விவாஹ சேவையில்...

வேதபாரதி, புதுச்சேரி.

---





**விருது வழங்கும் விழா**

ஸ்ரீமான் பரசுராமன் (பன் மொழிவித்தகர் கலியுக வ்யாஸர் நம் அன்பிற்குரியவர் **மேதகு ஆளுநர் R.N. ரவி** அவர்களின் திருக்கரங்களால் கம்ப சித்திர விழாவில் விருது வாங்கினார்.

Courtesy.

**ஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள்**

வேளச்சேரி


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY

# பூக்களோடு பேசுவோம்
## பூமிக்கு வந்த தேவ மலர் - பாரிஜாதம் எனும் பவழமல்லி

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**



*வெள்ளை வெளேர் என்று இதழ்கள்! அதனைத் தாங்கி நிற்கும் சிவந்த குழல்கள்! சிறிய உருவம்தான் என்றாலும் பார்த்ததும் மனம் பரவசப்பட்டு போகுதே! அதி காலை வேளையில் இருள் பிரியாத நேரத்தில் பூமி முழுவதும் கொட்டிக் கிடக்கும் பவழமல்லி மலர்களை ஒவ்வொன்றாக பொறுக்கி, ஊசி நூலில் கோர்த்து, மிக மிக அழகிய மாலையாக்கி தெய்வங்களுக்குச்சார்த்தி அழகு பார்த்திராத பாரதப் பெண்கள் இருக்க முடியுமா? என்று வியக்கும் அளவிற்கு பவழ மல்லிகை மரம் இந்த பூமிக்கு, அதுவும் இந்த தேசத்திற்கு, இந்த சிறிய, அழகிய மலரை ஸ்ரீ கிருஷ்ணர் அல்லவா கொண்டுவந்தார்! எதற்காக? ருக்மணி, பாமா என்று இரண்டு மனைவிகளையும் திருப்திப்படுத்துவதற்காக இந்திரன் தோட்டத்திலிருந்து! இந்திரன் தோட்டத்திற்கு இந்த மலர் மரம் எப்படி வந்தது?*

*திருபாற்கடலைக் கடைந்தபோது வெளிவந்தவை கற்பகவ்ருக்ஷம் மற்றொன்று இந்த அழகிய மலரைத் தரும் பவழ மல்லிகை என்னும் பாரிஜாத மரம் இதன் அழகிலும் நறுமணத்திலும் மயங்கி இந்திரன் இதனைத் தனது தேவலோகத் தோட்டத்திற்கு கொண்டு*

சென்றுவிட்டான் என்று புராணங்கள் கூறுகின்றன. இந்திரன் தோட்டத்து பாரிஜாத மரத்தை எப்பிடியாவது பூமிக்கு கொண்டுவந்துவிடவேண்டும் என்று நாரதர் விரும்பினார். அவருக்கு ஏன் இந்த விருப்பம்? நாராயணரையே தன் மூச்சாகக் கொண்டிருக்கும் நாரதர், அவருக்குப் பிரியமான மலரை இந்திரன் தோட்டத்தில் எப்படி விட்டுவைப்பார்? அதுவும் ஸ்ரீ நாராயணர், கிருஷ்ணாவதாரத்தில், பூமியில் இருக்கும்போது அவர் இருக்கும் இடத்தில் இந்த மரம் இருப்பதுதானே சரி என்று நினைத்தார். ஸ்ரீ கிருஷ்ணரைக் கொண்டே தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு, ஒரேஒரு பவழ மல்லிகைப் பூவை எடுத்துக்கொண்டு, பூலோகத்திற்கு வந்த நேரத்தில் கிருஷ்ணர் தன் மனைவியர்களோடு துவாரகையில் இருந்தார்.

“கிருஷ்ணா உனக்காகவே இந்த பாரிஜாத மலரைக் கொண்டு வந்தேன் ருக்மணிக்கு மலர்கள் என்றால் ரொம்ப விருப்பமல்லவா? நீ இதை அவளுக்கு கொடுப்பாயென்று நினைத்தேன்” என்றார். அனைத்தும் அறிந்த கிருஷ்ணர், ஏதும் அறியாத அப்பாவிபோல், “ஆஹா இதற்கு முன் அவள் இந்த மலரைப் பார்த்திருக்கமாட்டாள் நான் உடனே போய் அவளை சந்தோஷப்படுத்துகிறேன்” என்று கிளம்பிப் போனார் நாரதரும் இதற்காகவே காத்திருந்தவராக, சத்யபாமாவை சந்தித்து விஷயத்தைச் சொன்னார். சத்யபாமா, அவர் எதிர்பார்த்தபடியே, தன் கோபத்தை வார்த்தைகளில் கொட்டினாள். அவருடைய நோக்கம் பவழமல்லி மரத்தை பூமிக்கு, சாட்சாத் ஸ்ரீ நாராயணராகிய கிருஷ்ணர் இருக்கும் இடத்திற்குக் கொண்டு வருவது தானே! சத்யபாமாவை சற்று

நிதானப்படுத்தி, “ஒரே ஒரு மலர் என்ன பிரமாதம்? உனக்காக கிருஷ்ணர், அந்த மரத்தையே இங்கு கொண்டுவந்து விடமாட்டாரா. என்ன?” என்றார். சத்யபாமா கிருஷ்ணரைப் பிடித்து உலுக்குவதற்காகக் கிளம்பிப் போனாள். அழுது ஆர்ப்பாட்டம் செய்து மரத்தைக் கொண்டுவர கிருஷ்ணனை தேவலோகத்திற்கு அனுப்பி வைத்து விட்டாள்.

இந்திரன் தோட்டத்திற்கு, கிருஷ்ணர் வருவதற்குள், நாரதர் இந்திரனை சந்தித்து, “உன் பாரிஜாத மரத்திற்கு ஆபத்து அதனை பூலோகத்திற்கு எடுத்து செல்ல திட்டம் தீட்டப்படுகிறது” என்று சொல்லி வைத்தார். இந்திரன் உஷாரானான். காவலை அதிகரித்தான். கிருஷ்ணர் என்ற திருட்டுப்பூனை மாட்டிக்கொண்டது. இந்திரசபையில் கொண்டுபோய் நிறுத்தப்பட்டார். கிருஷ்ணர் வேறு வழி இன்றி இந்திரனிடம், தன் மனைவிகள் பிரச்சினையில், தன்னை மாட்டிவிட்ட நாரதர் கலகத்தைச் சொல்லி இந்த மரம் இல்லாமல் தன்னால் துவாரகைக்குத் திரும்ப முடியாது என்று பரிதாபமாகச் சொன்னார். சாட்சாத் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணருக்கு, அர்ப்பணம் செய்ய முடியாத ஒரு வஸ்து இருக்க முடியுமா? அதுவும் கிருஷ்ணரே நேரில் வந்து கேட்ட பிறகும் தர மறுக்கும் இதயம் யாருக்காவது இருக்க முடியுமா? இந்திரனே மரத்தை எடுத்து வந்து மன நிறைவுடன் கொடுத்தான்.

ஒருமரம் ரெண்டு மனைவிகள்! அதுவும் பிரச்சினைதான். யோசித்தார் சாமர்த்தியசாலியான ஸ்ரீ கிருஷ்ணர். சத்யபாமாவின் தோட்டத்தில் பாரிஜாத மரத்தை நட்டுவிட்டு, மலர்கள் ருக்மணியின் தோட்டத்தின் பக்கமாக விழும்படி கிளைகளை வளைத்து வைத்தார். அவருக்கு நன்றாகத் தெரியும்,

ருக்மிணி அந்த மலர்களைப் பொறுமையாக சேகரித்து மாலையாகக் கோர்த்துத் தனக்கே சூட்டுவாள் என்று அவ்வாறே ருக்மணித் தாயார் இந்த பூமியில் விழுந்த முதல் பாரிஜாத மலர்களைச் சேகரித்து கிருஷ்ண பகவானுக்கே அர்ப்பணம் செய்தார். எங்கெல்லாம் பவழமல்லி மரம் இருக்கிறதோ அங்கெல்லாம், அதன் அடிப்பகுதியில் ஆதிசேஷனும் ஆஞ்சநேயரும் வாசம் செய்வதாகவும், சதா, சர்வ காலமும் ஸ்ரீ ராம நாம ஜபம் செய்து கொண்டே இருப்பதாகவும் ஐதீகம். இந்த சிறிய மலருக்குதான் பகவானுடன் எத்தகைய ஐக்கியம் பாருங்கள். மாயவனுக்காக மாயவனே கொண்டுவந்த பெருமை பவழமல்லிக்கு மட்டுமே உரித்தானது.

மேற்கு வங்கத்தின் மாநில மலர் இது. வங்காளிகளின் உள்ளம் கொள்ளை கொண்ட மலர். வங்கக் கவிஞர் ரபிந்த்ரநாத் தாகூரின் விருப்பமான மலர் தாய்லாந்து தேசத்தின் தேசமலரும் இதுதான். வங்காளிகள், இந்த மலர் பூத்துக் குலுங்கும் காலம் வந்துவிட்டால் "மா துர்கா தேவியின் வருகையை உணர்த்துவதாக ஆனந்த கூத்தாடுகிறார்கள்.

பாண்டிச்சேரி அன்னை அவர்கள், பவழமல்லிகை மலர்களுக்கு "ஆர்வம்" என்று பெயர் கொடுத்துள்ளார்கள். எண்ணற்றதாயும் பிடிவாதமாகவும், சலிக்காமலும் மீண்டும் மீண்டும் மலர்ந்து வாசம் வீசுவதாயும் இருக்கிறபடியால் இந்தப் பெயர் என்று விளக்கமும் கொடுத்துள்ளார். வட இந்தியர்கள், இந்த மலரை "கடவுளுக்கான ஆபரணம்" என்று பொருள்படும்படியாக 'ஹரசிங்கார்' என்றழைக்கிறார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணர், நாரதர் மூலமாக இந்த மரத்தை பூமிக்குத் தன் மனைவிகளைத் திருப்திபடுத்துவதற்காக

கொண்டுவந்ததாகப் புராணக்கதைகள் சொல்லப் பட்டாலும், ஆயர்பாடிக் கண்ணனுக்கு, இந்த பூமியிலுள்ள தன் பக்தர்களின் தேக ஆரோக்யத்தில் தான் அளப்பரிய அக்கறை என்று இன்னொரு விளக்கமும் படித்தேன். திருபாற்கடலில் உதித்த இந்த மரம், திருநரையூர், திருக்கள்ளர், சீர்காழி மற்றும் திருகோட்டாறு ஆகிய திருத்தலங்களின் ஸ்தல வ்ருக்ஷமாக விளங்கி, தன் மருத்துவ பலன்களை, மனிதர்கள் உணருமாறு செய்கிறது வாழை மரத்தைப் போன்று, பவழமல்லிகை மரத்தின் அனைத்து பாகங்களும் மருத்துவ பலன்கொண்டவை. வாதம் பித்தம், தொடர் ஜூரம், மூட்டுவலி, இடுப்புவலி என்று பல பிரச்சினைகளுக்கு இது வரப்பிரசாதம்.

இது பற்றிய என் தேடலில் அம்பாலா கண்டோன்மென்ட் பகுதியிலிருந்து ஒரு விமான படைவீரர், தன் அனுபவத்தை பகிர்த்துகொள்வதைப் படித்தேன்.

“மாடிப்படிகளிலிருந்து தவறி விழுந்து எலும்பு மூட்டு நகர்ந்து விட்டதென்று படுத்த படுக்கையாகிவிட்டார். அறுவை சிகிச்சைக்கும் நாள் குறிக்கப்பட்டுவிட்டது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வேறு சில பரிசோதனைகளுக்காக மருத்துவ மனையில் காத்திருந்தார். அருகே ஒருவர், அவரும் ஓய்வு பெற்ற விமானப்படை வீரர். என்ன பிரச்சினை என்று விசாரிக்க, முதலாம் நபர் விவரம் சொல்லிவிட்டு, நாளை மறுநாள் தனக்கு அறுவை சிகிச்சை நடக்க விருப்பதையும் சொன்னார். இரண்டாம் நபர், “உங்களால் முடியுமானால் உங்கள் அறுவை சிகிச்சையை கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு நான் சொல்லுவதை செய்து பார்க்கிறீர்களா?” என்று கேட்டார். முதலாமவர் நம்ப முடியாமல் அவர்

சொல்லிக்கொடுத்த ஒரு பக்குவத்தை கேட்டுக் கொண்டார். செய்து பார்த்தார். மருத்துவர்களே வியந்து, அறுவை சிகிச்சையே வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள்.

எல்லாம் அந்த மாயவன் கொண்டுவந்த பாரிஜாத மரத்தின் மாயம் தான் என்றால் நம்பமுடியவில்லை தானே!

நம்ப முடியாத அந்த பக்குவம் இதுதான். ஒரு கிலோ பவழ மல்லிகை இலையை எடுத்து சுத்தம் செய்து நான்கு லிட்டர் தண்ணீர் சேர்த்து கொதிக்கவைத்து. இரண்டு லிட்டர் ஆகக் குறுக்கி ஒரு பாட்டிலில் ஊற்றி வைத்து கொண்டு தினமும் காலை மாலை இருவேளையும் வெறும் வயிற்றில் ஒரு கோப்பை குடித்து வரவேண்டும். அப்படியே செய்தார். அறுவை சிகிச்சையிலிருந்து தப்பித்தார். நான் சொன்னால் நம்புவதற்கு கஷ்டமாக இருக்கலாம். இதை வேதபாரதிக்காக நான் எழுதிக்கொண்டிருக்கும் போது, மும்பையிலிருந்து எங்கள் குடும்ப நண்பர், ஓய்வு பெற்ற ரிசர்வ் வங்கியின் உயர் அதிகாரி திரு.கோபால கிருஷ்ணன் தன் மனைவியுடன் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். நான் முழங்கால் வலியால் அவதிப்படுவதைப் பார்த்து, இதே பக்குவத்தை எனக்குச் சொன்னார். எதற்கும் ஒரு ஆயுர்வேத மருத்துவரிடம் கேட்டுவிட்டு செய்துபார்க்கலாம் என்றிருக்கிறேன். இப்படி எத்தனையோ ஆச்சர்யகரமான மருத்துவபலனை, இந்த உலக மாந்தர்களுக்கு அளிக்கவே காக்கும் கடவுளான விஷ்ணுவால் பூமிக்கு வந்தது இந்த மலர் மரம்.

வேதபாரதி வாசகர்களுக்கு: இதுவரை வேதபாரதியில் இடம்பெற்ற மலர்கள் பற்றிய விவரங்கள், ஏற்கனவே கல்கி - தீபத்தில் ஓராண்டு காலம் வெற்றித் தொடராகவும், பின்னர் செங்கை பதிப்பகம்

வெளியிட்ட புத்தகமாகவும், அதனையும் தொடர்ந்து Pustaka.com என்ற டிஜிட்டல் வெளியீட்டு நிறுவனத்தால் டிஜிட்டல் புத்தகமாகவும், சாதாரண புத்தகமாகவும் வெளிவந்து மிகுந்த வரவேற்பை பெற்றுவிட்டது. இதற்கு முன் அறிமுகமான சில மலர்களை உங்கள் பார்வைக்கு கொண்டுவர அனுமதித்தமைக்காக வேதபாரதி ஆசிரியர் மற்றும் குழுவினருக்கு என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். புத்தகம் வேண்டுவோர் என்னைத் தொடர்பு கொள்ளலாம் அல்லது Pustaka.com-ல் முயற்சிக்கலாம். இனி விருஜ் யாத்திரையில் மட்டுமே சந்திக்கலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய எண் : *99413 87193*

முற்றும்.




||Shri Chowdeshwari Prasanna||

**SHREE SHANKARA THAPOVANAM**

**(Shree Chandramouleswara Seva & Trust)**

Plot No.596, VGP Jayanagar, Onnalavadi, Thorapalli Panchayat, Rayakotta Road, HOSUR – 635126.

**MONTHLY SEVA**

1. Pradosha Pooja
2. Shukla Panchami Pooja
3. Ashlesha Abhishekam
4. Sankasthahara Chatrurthi
5. Go Pooja on Fridays

**GAU POSHANA SEVA**

1 Cow feeding for day rs.145/-

10 cows for day Rs.1,450/-

1 Cow for month Rs.4350/-

10 Cows for month Rs.43,500/-



**Life Time One day Pooja for Every year (Life Membership) Rs.5001/-**



***Devotees are requesting to contribute for Gou Seva***

**For Online Payments**

A/c Shree Chandramouleswara Seva & Trust, Inidan Bank,
A/c No.6189034010 IFSC Code : IDIB000B142
Branch : Hosur

# பஞ்சாங்கபடனம் – 2025

ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் திங்கள் முதல்நாள் தமிழ் வருடப்பிறப்பினை முன்னிட்டு "பஞ்சாங்கப் படனம்'' எனும் நிகழ்ச்சியானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கடந்த 14.04.2025 திங்கள்கிழமை அன்று "விசுவாவசு'' வருடத்தை முன்னிட்டு இந்நிகழ்ச்சியானது திரு.சந்திரசேகரன் அவர்கள் இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் வேதபாரதி மற்றும் ஊரப்பாக்கம் பிராமின் அசோசியேஷன் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். மன்னை திரு.நாராயணசாமி அவர்கள் இவ்வருடத்திற்கான பொதுவான பலன்களை விளக்கி நமது சனாதன தர்மத்தின் அவசியம் குறித்தும் அதில் நமது அமைப்பின் பங்கு குறித்தும் சிறப்புரை ஆற்றினார்கள். அதனைத் தொடர்ந்து விஷ்ணு சஹஸ்ர நாம பாராயணம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் நீர், மோர், பானகம், பிரசாதம் மற்றும் நமது கலாச்சாரத்தை போற்றும் விதமாக தாம்பூலம் வழங்கப்பட்டது'' "கலாச்சாரத்தை காப்போம் நமது பண்பாட்டைபோற்றுவோம்''.



# இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

*இராவணன் சீதையிடம் உனக்கு இரண்டு மாதம் அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் எனக்கு அடி பணிந்துவிடு, இல்லாவிடில் அரக்கர்களுக்கு உன்னை இரையாக்குவேன் என பயமுறுத்தினான். பிறகு சுற்றியிருந்த அரக்கிகளிடம் சாம, தான, பேத, தண்ட நான்கையும் உபயோகித்து இவளை எனக்கு உரியவள் ஆக்குங்கள் என்றான்.*

*இராவணனுடன் வந்த அவனது மனைவிகள் இருவரும் அரசே, தங்களை விரும்பாத பெண்ணால் ஒரு மனிதன் துன்பம் தான் அடைகிறான். தனக்காக வாழக்கூடிய பெண்மணியினால் தான் ஒரு மனிதன் இன்பத்தை அடைகிறான் என்று கூறினார்கள்.*

*அரக்கிகள் மிரட்டல்கள் தொடர்ந்தது. திரிஜடை என்ற பெண் மட்டும்தான் சீதைக்கு ஆதரவாக இருந்தாள். இந்தச் சூழ்நிலையை சாதகமாக்கிக் கொண்டு ஹனுமன் மேலே மரத்தில் இருந்து தனது அழகிய குரலில் இராமாயணம் அதுவரை நடந்ததை பாடினான். ராமரின் பெயரைக்கேட்ட சீதைக்கு ஒரே ஆச்சரியம். பிறகு ஹனுமன் சீதை முன் வந்து, பணிந்து நான் இராமரின் தொண்டன். இப்போது எனது அரசன் சுக்ரீவன் கட்டளையில் இராம தூதனாக தங்கள் முன் வந்திருக்கின்றேன். அரக்கர்களின் மாயா சக்தியை உணர்ந்த சீதைக்கு முதலில் ஹனுமன் மீது சந்தேகம் ஏற்பட்டது. இராமர் கொடுத்த கணையாழியை ஹனுமன் கொடுத்தவுடன் ஓரளவு நிம்மதியடைந்தாள்.*

*சுக்ரீவன் ராமன் நட்பு, வாலி வதம் பற்றி சுருக்கமாகக் கூறினான் ஹனுமன். நான்கு திசைகளிலும் தங்களைத்தேட வானரப்படைகளை சுக்ரீவன் அனுப்பியிருக்கிறான். அதில் தென் திசைநோக்கி வந்த வானரங்களில் நானும் ஒருவன் என்று ஹனுமன் கூறினான்.*

இராவணன் தனக்கு விதிக்கப்பட்ட கெடு பற்றியும் சீதை ஹனுமனிடம் கூறி இராம, இலக்குவனைப் பற்றி விசாரித்தாள். இராமரின் மனநிலையைப் பற்றியும் கேட்டறிந்தாள். தன்னையே நினைத்து இராமர் வருந்திக் கொண்டிருப்பதாக ஹனுமன் மூலம் தெரிந்து கொண்ட சீதை, தனது சொந்தக் கடமைகளைச் சரிவரச் செய்கிறாரா என்றும் கேட்டாள்.

ஒரு விஷயத்தைப் பற்றி அதுவும் துன்பத்தைப் பற்றி தொடர்ந்து சிந்திப்பதில் நன்மை இல்லை. உடல், மனம் இரண்டும் அதனால் வாடிவிடும். துன்பத்தை நீக்க மட்டும் தான் வழிதேட வேண்டும் என்பது நியதி.

சீதையின் உச்சகட்டத் துன்பத்தை அறிந்த ஹனுமன் இப்போதே, நீங்கள் சம்மதித்தால் ராமரிடம் செல்ல முடியும். என் முதுகில் அமர்ந்து செல்லலாம் என்றான். சீதை அதற்கு உடன்படவில்லை. மேலும் ஹனுமனிடம் உனது இந்தச் சரீரத்தை வைத்துக் கொண்டு எப்படி என்னை தூக்கிச் செல்வீர் என்று கேட்டாள். உடனே ஹனுமன் தனது பெரிய சரீரத்தை எடுத்தார். தனது பலம் பற்றி வெளிப்படுத்தினார். அப்போது சீதை நான் உன்னைச் சந்தேகிக்கவில்லை. திருட்டுத்தனமாக இராவணன் என்னை இங்கு கொண்டு வந்தான். நானும் அதுபோல் உன் முதுகில் ஏறி வரவிரும்பவில்லை. மேலும் மேலும் உனக்குத் துன்பம் கொடுக்க நான் விரும்பவில்லை. இராமர் இங்கு வந்து என்னை மீட்டுச் செல்வது தான் எனக்கு கௌரவம் என்றாள் சீதை.

இவ்வளவு பெரிய கடலை இராமரும், மற்றஉன்னுடன் சேர்ந்த வானரப் படைகளும் எப்படித் தாண்டி வரமுடியும். எனக்கு ஒரே கவலையாக உள்ளது என்றாள். அப்போது ஹனுமன், சீதையிடம் எந்த அரசனும் பலமான வீரனைத் தூதுவராக

அனுப்பமாட்டான். அங்குள்ள வானரங்களில் மிகவும் குறைந்த திறமையை உடைய வானரம் நான் தான்.

மிகுந்த பலசாலியான ஹனுமன் தன்னை மிகவும் குறைவாக மதிப்பிட்டு தனது தன்னடக்கத்தை வெளிப்படுத்தினான். இன்று உலகில் உள்ளவர்கள் கடுகளவு விஷயம் அதுவும் அரைகுறையாக அறிந்து கொண்டே மலைபோல் குதிக்கிறார்கள். ஹனுமனிடமிருந்து தன்னடக்கத்தை உலகினர் கற்றுக்கொள்ள வேண்டும்.

பிறகு தனக்கும், இராமருக்கும் இடையே நடந்த ஒரு சம்பவத்தைக் கூறினாள். ஒருமுறை காக்கை என்னைத் தீண்டி துன்பப்படுத்தியது. உடனே அருகிலிருந்த புல்லின் மீது சக்தியை ஏற்றி அந்தக் காகத்தின் மீது விடுத்தார். அது பல இடங்களிலும் சுற்றி தப்பிக்க வழியின்றி எங்களிடமே சரண் அடைந்தது. அதற்கு அடைக்கலம் கொடுத்தார். அதன் ஒரு கண் மட்டும் போனது. எனக்கு தீமை செய்த காகத்தையே உடன் தண்டித்தார். ஆனால் பல மாதங்கள் ஆகியும் இராவணனது கொடுமையில் சிறைப்பட்டிருக்கும் என்னை ஏன் இன்னும் காப்பாற்றவரவில்லை. நான் இலக்குவனிடம் கடும் சொல் கூறியதற்காக என்மீது கோபமாக இருக்கிறாரா? நான் கூறியதாக இலக்குவனிடம் மன்னிக்கும்படி கூறுங்கள்.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

---

## வருந்துகிறோம்

வேதபாரதி திருச்சி உறுப்பினர் சாய்பிரசன்னா அவர்களின் தந்தை ஸ்ரீ கல்யாண சுந்தரம், வயது 85 அவர்கள் இறைவன் பாதம் சேர்ந்தார்கள். வேதபாரதியின் சார்பில் மாமாவின் ஆன்மா சாந்தியடைய ப்ரார்த்தனை செய்கிறோம். குடும்பத்தினருக்கு எங்கள் ஆறுதல்.

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.



- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.

24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**

# வியப்பூட்டும் விருஜ் பூமி யாத்திரை

## மதுரா விருந்தாவனில் ஸ்ரீ ராதாகிருஷ்ணமயம் – 5

**(Dr. ஷ்யாமா ஸ்வாமிநாதன்)**

*ராதே கிருஷ்ணா! எல்லாம் இறைசெயல் !*



*விருந்தாவனத்தில், ஷாந்திதாம் விடுதியின் அறையில் இரவு தனியாக ஸ்ரீ ராதாகிருஷ்ண சிந்தனைகள் மட்டுமே மனதில் ஓடிக் கொண்டிருக்க, உறங்க முயற்சித்து தோற்றுப்போனேன். யாத்ரா அதிகாரிகளின் அறிவிப்பின் படி இன்று காலை எங்கள் விருப்பம் போல சென்று வரலாம். ரயிலில் வந்து கொண்டிருப்பவர்கள் மதியம் ஒரு மணிக்கு வந்து சேர்ந்தவுடன், மதியம் 3 மணிக்கு கிளம்பும் முதல் யாத்திரை ஸ்ரீ கிருஷ்ண ஜென்மஸ்தான் ஆன மதுராவில் தொடங்கும், விடுதியின் வாயிலில் 1, 2, 3 என்று எண்களிடப்பட்ட மூன்று பேருந்துகளில், பெயர் பட்டியல் வாசித்து ஏற்றப்படுவார்கள். அதுவே தொடர்ந்து ஏழு நாட்களும், அவரவர் இருக்கையாக இருக்கும் என்றார்கள். மதியம் ஒரு மணிவரை ஏதாவது ஒரு கோயிலை பார்த்துவிட்டு வரலாம் என்று நாங்கள் மூவரும் (பாரதி கணேசன், அவர் மனைவி சரஸ்வதி, நான்) வாயிலுக்கு வந்தால், வரிசைகட்டி நின்று கொண்டிருந்தன E-ரிக்ஷாக்கள். நல்ல வேளையாக எங்களுக்குக் கொஞ்சம் ஹிந்தி தெரிந்திருந்தது. எடுத்த உடனே அவன் பிரேம்மந்திர் என்றான். அதுதான் நேற்று இரவு பார்த்துவிட்டோமே என்று நினைத்தேன்.*

ஆனால் அதற்குள் சகி சரஸ்வதி நேற்று கூட்டத்தில் சரியாகப் பார்க்கவில்லை. மேலும் மேல்தளத்தில் ஸ்ரீ ராம் பரிவார் பார்க்கவில்லை, அதனால் இப்போது பகலில் நிதானமாகப் பார்க்கலாம் என்றார். மேலும் விருந்தாவனத்தின் பிரேம்மந்திரை இரவு – பகல் இரண்டு வேளைகளிலும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டும்.

ஸ்ரீ ராதாகிருஷ்ணரின் வெண்பளிங்கு மாளிகையான பிரேம்மந்திர், காலையில் இயற்கை ஒளியில், இதயம் கொள்ளை கொள்ளும் பேரழகுடன் வானளாவிய அளவில் பிரும்மாண்டமாகக் காட்சியளித்தது. நல்ல வேளை... கூட்டம் சற்று குறைவாகவே இருந்தது. இரவில் வண்ண வண்ண ஒளி விளக்குகளில் திரைப்படம் போல் காட்சியளித்து வெளிவளாக ஸ்ரீ கிருஷ்ண லீலை சிலை உருவக் காட்சிகள் இப்போது, மிக அமைதியாக, நாம் நின்று நிதானித்து, ரசிக்கும வகையில் புன்முறுவலுடன் தெய்வீகமாக, நம்முடன் பேசுவது போலவே இருந்தது. காளிங்க நர்த்தனம், இடைச்சிறுவர்களுடன் ஸ்ரீ கிருஷ்ணர் மாடுகள் மேய்த்தல், வன போஜனம் செய்தல், ஸ்ரீ ராதா மற்றும் கோபிகைகளுடன் விளையாடுதல், ஸ்ரீ ராதாவின் அஷ்ட சகிகள் உடனிருக்க, ஸ்ரீ ராதா கிருஷ்ணருடன் ஊஞ்சல் ஆடுதல், விருஜ்வாசிளை அடைமழையிலிருந்து ரக்ஷிக்க, ஸ்ரீ கிருஷ்ணர் கோவர்தனமலையைத் தன் ஒரு விரலால் தாங்கி, குடைபோல் பிடித்திருக்கும் அற்புதம், ஸ்ரீ ராதா மற்றும் கோபிகைகளுடன் ராசலீலை செய்யும் காட்சிகள், அனைத்தையும் ஆசை தீரும்வரை பார்த்து மகிழ்ந்தோம். அத்தனை சிலைகளும் ஜீவனோடு, துவாபரயுகத்தில் நாமும் ஸ்ரீ ராதாகிருஷ்ணருடன், விருஜ்வாசிகளாகவே வாழ்ந்து அனுபவிப்பது போல

உணரவைத்து விடுகின்றனர். யாத்ரீகர்கள், உணரும் பேரானந்தத்தை இதைவிட உன்னதமாக வர்ணிக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. இவை அனைத்தும் மத்தியில் எழுப்பப்பட்டுள்ள ஆலயத்தின் முன்னால் உள்ள மிகப் பரந்த அளவிலான வளாகத்தில் நுழைவாயிலில் தொடங்கி, வெளிவாயில் வரை வலது – இடது புறங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இருபது – முப்பது வெண்பளிங்குப் படிகள் ஏறி, மத்திய மண்டபத்தை எட்டிவிட்டோம். முதியவர்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் பயன்படுத்துவோருக்கென படிகளின் இரண்டு புறமும் சரிவுப்பாதைகள் கைப்பிடியுடன் அமைக்கப்பட்டுள்ளன.



''ராதே ராதே' என்றோ' ராதே கிருஷ்ணா' என்றோ, 'ஜெய் ஸ்ரீ ராம் – ஜெய் சீதா ராம்'' என்றோ சொல்லிக் கொண்டே, சுலபமாகப் படிகளை ஏறி விடமுடிகிறது. உள்ளே சமாளிக்கக் கூடிய கூட்டம் தான்.

ராதா கிருஷ்ண முழக்கம் எங்கும் வியாபித்து ஒலிக்கிறது. பெரும்பாலான பெண்களின் கைகளில் அழகழகான தொட்டில்கள், கூடைகள் போன்றவற்றில் குட்டிப் பட்டு மெத்தையில் மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட தவழும் ஸ்ரீ ராதா கிருஷ்ண விக்ரகங்களை, குழந்தையைத் தூக்கிக் கொண்டு வருவது போல் எடுத்து வருவது இந்தியப் பெண்களின் வழக்கமாக இருக்கிறது. இது எனக்கு முன்னமே தெரிந்திருந்தால் நான் கூட என் குட்டிக் கிருஷ்ணனை எடுத்து வந்திருப்பேன். மிகவும்

வருத்தப்பட்டேன். இருப்பினும் விருஜ்வாசிகளின் இந்த பக்தி ஆனந்தமாக இருந்தது. கூட்டத்தில் நகர்ந்து நகர்ந்து ஒரு வழியாக கர்ப்பகிருகம் போல் இருக்கும் மத்திய மண்டபத்தில் வந்து நின்றுவிட்டோம். ஸ்ரீ ராதாராணியும் ஸ்ரீ கிருஷ்ணரும் அவர்களுக்கே உரிய மிக நளினமான எழிலுடனும், கண்கவரும் ஆடை ஆபரணங்களுடனும், தரிசித்தவுடனேயே, மனதில் ஆனந்தம், பேரானந்தம் ஊற்றெடுக்கும் வகையில் நின்றகோலத்தில் காட்சியளிக்கிறார்கள். வைத்த கண் வாங்காமல் தரிசித்து கொண்டே இருக்கிறோம். அவர்களுக்குக் கீழே, உற்சவ மூர்த்திகள் போல் சிறிய ஸ்ரீ ராதாகிருஷ்ண விக்ரகமும் குரு கிருபாலுமகராஜ் விக்ரகமும் (அப்படித்தான் நினைக்கிறேன்) இருந்தன.

எதுவும் வேண்டத் தோன்றவில்லை. 'ஒன்றும் குறையில்லை கண்ணா' என்றே சொல்லத் தோன்றியது. மன நிறைவுடன் மெல்ல மெல்ல நகர்ந்தோம், மேல்தளத்தில் ஸ்ரீ ராம் பரிவார் தரிசனம் செய்வதற்கு குறுகிய படிகளில் ஏறிச்செல்ல வேண்டியிருந்தது. எனக்கு மனதில் ஸ்ரீ கிருஷ்ணராதா சன்னதியில் அமைதியாக அமர்ந்து, தியானிக்க வேண்டும் என்று தோன்றியது அதற்காக ஸ்ரீ ராம்பரிவார் தரிசனத்தை தியாகம் செய்துவிட்டு, வெண்பளிங்கு மண்டபத்தில், சற்று தூரத்தில், தரையில் அமர்ந்து கொண்டே ஸ்ரீராதாகிருஷ்ணனை தரிசித்துக் கொண்டே இருந்தேன். என்னருகே, குட்டிப் பல்லக்கு போல் அலங்கரிக்கப்பட்ட கூடையில், தவழும் ஸ்ரீ ராதாகிருஷ்ண விக்ரகங்களை வைத்துக் கொண்டு, ஒரு பெண்மணி அமர்ந்து கொண்டிருந்தார். அவர் அனுமதியுடன் புகைப்படம் எடுத்துக்கொண்டேன். அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டே இருந்தது. நானும் மனதை ஒரு முகப்படுத்த

முயற்சித்தேன். அடுத்து, ப்ரியகாந்த்ஜூ மந்திர் என்று பெயர் கொண்டதும், லோட்டஸ்மந்திர் (தாமரை கோவில்) என்றழைக்கப்படும கோவிலுக்குச் சென்று தரிசித்துவிட்டு, விடுதிக்குத் திரும்பி, மதிய சாப்பாட்டை முடித்துக்கொண்டு, அனைத்து யாத்ரீகர்களுடன், மதியம் 3 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணஜென்மஸ்தான் ஆகிய மதுராவிற்குச் செல்ல வேண்டும் இதிலிருந்து தான் விட்டல் சம்ஸ்தான் திட்டமிட்ட யாத்திரை தொடங்கவிருக்கிறது.

விருஜ்பூமியில் பயணம் தொடரும்...

## வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்

**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.200

10 வருட சந்தா ரூ.1500

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**

**City Union Bank, Velachery Branch**

**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

புத்தகத்திற்கு ஆயுள்சந்தா, வருஷ சந்தா செலுத்துபவர்கள் மேலே உள்ள வங்கி கணக்கில், அருகில் உள்ள QR Code-ல் பணம் செலுத்தி விலாசம், விவரங்களை கீழ்கண்ட வாட்ஸ்அப் எண்ணில் தகவல் அனுப்பவும்.

செல் : 91768 77442


உ
திருமண பொருத்தம் இலவசம்
(அனைத்து சமூகத்தினருக்கும்)
வாட்ஸ்அப் மூலம் மட்டும்
பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.
தேதியூர். V.J. ராமன்
ஆத்மார்த்த ஜோதிடர்
9003195599
9445230940

# சிவராத்திரி

## சிவாலய ஓட்டம் நடைபெறும் சிறப்புமிக்க பனிரெண்டு சிவாலயங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

### திக்குறிச்சி ஸ்ரீமகாதேவர் திருக்கோயில் - 2

*சிவாலய ஓட்டம் நடைபெறும் தலங்களில் இது இரண்டாவது தலம் ஆகும். மார்த்தாண்டத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. தாமிரபரணிக்கரையில் கிழக்கு நோக்கிய ஆலயம் என்றாலும் வடக்குவாயில் யானைக்கதவுகளுடன் பிரம்மாண்டமாகத் திகழ்கிறது.*

*திக் என்றால் ஞானதிருஷ்டி, ரிஷி எனில் முனிவர், புருஷாமிருகம் ஆகிய வ்யாக்ரபாதர், தமது ஞானதிருஷ்டி மூலம் சிவனார் தியானம் செய்வதைத் தரிசித்த தலமாகையால் திக்ரிஷி எனப்பெற்றது. பின் மருவி திக்குறிச்சி என இன்று அழைக்கப்படுகிறது.*

*அர்ச்சுனனுக்கும் கிராதகனாக வந்த சிவனுக்கும் கடும் போர் நடந்தது. இறுதியாக அர்ச்சுனன் வில்லால் சிவனைத் தலையில் அடித்து தானும் தரையில் விழுந்தான். தான் மீண்டும் பலம் பெறத் தரையில் கிடந்த ஒரு கல்லையே சிவலிங்கமாக கருதி, அருகில் உள்ள பூக்களைப் பறித்து அர்ச்சித்து வழிபட்டான். அப்பூக்கள் கிராதகனின் மீதே விழுந்தது.*

*வந்திருப்பது சிவபிரானே என அர்ச்சுனன் தெரிந்து கிராதகனிடம் மன்னிப்பு வேண்டினான். சிவனும் அர்ச்சுனனுக்குப் பாசுபதம் வழங்கியருளினார். தன் சீற்றம் தணியத் தாமிரபரணி ஜலத்தின் மீது ஜல ருத்ரராகத் தியானத்தில் அமர்ந்த இடமே இக்கோயில்.*

*மகாதேவரின் இலிங்கத் திருமேனியில் அர்ச்சுனன் வில்லால் ஏற்பட்ட தழும்பை இன்றைக்கும் நாம் காணலாம். தாமிரபரணி நதியின் மீது ஈசன் சுயம்புவாக*

எழுந்தருளியதால், ஆதியில் முன்னோர்கள் நதியின் திசையைத் திருப்பி, குறிப்பிட்ட இடத்தில் ஆலயத்தை எழுப்பினர். இன்றைக்கும் ஆலயத்தை ஒட்டி தாமிரபரணி பாய்கிறது. ஈசனின் சடை முடியே இங்கு நாம் வழிபடும் சிவலிங்கமாகக் காட்சி தருகிறது என்பது ஐதீஹம்.

600 ஆண்டுகளுக்கு முன்னர் திருவிதாங்கூர் மன்னர்கள் இக்கோவிலை புனரமைத்தனர். கட்டிபாகங்கள் மற்றும் இங்கு பாரம்பரியமாகக் காணப்படும். கல்குடி மரமும் ஆற்றுவெள்ளப் போக்கில் அடித்துச் செல்லப்பட்டன.

கல்குடிமரத்தில் எஞ்சிய பாகங்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன. இங்கு காணப்பட்ட நந்தியை 100 ஆண்டுகளுக்கு முன் விவசாய நிலங்களை அழித்ததன் காரணமாக நந்தியைப் பலர் ஆற்றில் தூக்கி வீசியெறிந்துவிட்டனர். இதனால் நந்தியில்லா சிவாலயமாக இருந்தது. தற்போது ஆகமவிதங்களின்படி மீண்டும் நந்தி பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளது.

கன்னிமூலையில் விநாயகர் அருள்பாலிக்கிறார். இங்கு விநாயகர் 7விதமாக வீற்றிருப்பதாக ஐதீகம். வனசாஸ்தா, நாகர், இசக்கியம்மன், பத்ரகாளி, க்ஷேத்ரபாலகர், பைரவர் ஆகிய சந்நிதிகள் உள்ளன.

ஆலயத்தை முறைப்படி வலம்வந்து கருவறைக்குச் செல்லவேண்டும். கருவறையின் உள்ளே சுயம்புலிங்கமாக திக்குறிச்சி மகாதேவர் அருள்பாலிக்கிறார். இறைவன் இங்கு சாம்பசதாசிவ ரூபமாக அருள்கிறார்.

இங்குதினமும் ஆகம விதிகளின் படி கால பூஜைகள், ஸ்ரீவல்லி பூஜைகள் நடைபெறுகின்றன. காலை 5.00 மணிக்கு நடைதிறந்து, காலை தீபாராதனை, அபிஷேகம்; நிர்மால்யபூஜை, உசித்பூஜை,

பந்திரநைவேத்தியம், கலசபூஜை, கலசாபிஷேகம், உச்சபூஜை, அத்தாழபூஜை, சீவேலிபூஜை நடந்து பகல் 11.30 மணிக்கு நடைசார்த்தப்படும். மாலை 5.00 மணிக்கு நடைதிறந்து, 6.30 மணிக்கு சந்தியா தீபாராதனை, 7.30 மணிக்கு வெள்ளைச்சாதம், உன்னியப்பம் நிவேதனம்; ஸ்ரீவேலி பூஜை முடிந்து இரவு 8.00 மணிக்கு நடைசார்த்தப்படும்.

தோஷங்களும், தடைகளும் நீங்கித் திருமணம் நடைபெற சுயம்வர தாரை கொடுப்பார்கள்.

தேக ஆரோக்கியம் வேண்டி ம்ருத்யுஞ்சய தாரை கொடுப்பார். தோஷபரிகாரத்திற்குப் பரிகார தாரை கொடுப்பர். சத்ரு சம்ஹார அர்ச்சனை, சஞ்ஜீவினி அர்ச்சனை போன்றவையும் செய்து வழிபடுகின்றனர்.

வெள்ளிக்கிழமை இசக்கிக்கும், பத்ரகாளிக்கும் தேய்பிறைஅஷ்டமி நாளில் பைரவருக்கும் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. பிரதோஷம், ஆயில்யம், அஷ்டமி, திருவாதிரை, தைப்பொங்கல், சதுர்த்தி, உத்திரம் நாள்களில் சிறப்புப் பூஜைகள் நடைபெறுகின்றன.

மார்கழி திருவாதிரை 10 நாள் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. மகா சிவராத்திரிப் பெருவிழாவும், சிறப்பாக நடைபெறுகிறது. தினமும் அரிசிசாதம், சிறுதானிய பாயாசம், அப்பம் ஆகியவை மகாதேவருக்குப் படைக்கப்படுகிறது. பத்ரகாளியம்மனுக்குத் தாலி சமர்ப்பித்து வழிபட்டால் திருமணத் தடை அகலும்.

உடற்பிணிகள், உள்ளப்பிணிகள் இங்கு வழிபட்டால் அகலும், நாள்தோறும் திக்குறிச்சி மகாதேவரை வழிபட்டுப் பேரருள் பெறுவோமாக.

தொடரும்...

## விரைவில் புதிய ஸ்லோக வகுப்புகள்

## கோரகஷ்ட நிவாரண ஸ்தோத்ரம்

**ஸ்ரீ ஸ்ரீ தேம்பே ஸ்வாமிகள் அருளியது.**

*பூஜ்யஸ்ரீ நெரூர் ஸ்ரீ வித்யா ஸங்கர ஸரஸ்வதி*
*ஸ்வாமிகள் அருளாசியுடன் ஆரம்பம்*
*ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன், மதுரை*
*ஸ்ரீமதி. நீலா முரளிதரன், மதுரை*



# கோடி காயத்ரீ ஜப யக்ஞும், ஊரப்பாக்கம் பெண்மையைப்போற்றுவோம் வேதபாரதி நிர்வாகிகள் சங்கமம் 2025

பூஜ்ய ஶ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் அனுக்ரஹத்துடன் பூஜ்ய ஶ்ரீ ஶ்ரீ நெரூர் வித்யா ஸங்கர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஆசிகளோடும், ஊரப்பாக்கம் ஶ்ரீ சங்கரவித்யாலயா பள்ளி வளாகத்தில் ஏப்ரல் 18,19,20 மூன்று நாட்கள் வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட் நடத்திய பெண்மையைப் போற்றுவோம், கோடீ காயத்ரீ ஜபயக்ஞும், வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட் முக்யஸ்தர்கள் ஆண்டுக்கூட்டம் நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

18.04.2025 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி முதலே 6 வதுக்கு மேல் படிக்கும் பெண் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களுடன் வளாகத்திற்கு வரத்துவங்கினார்கள். மறைமலைநகர் ஊரப்பாக்கம் மகளிர் குழந்தைகளை வரவேற்று அமரவைத்து, அழகு செய்து சிறப்பு அங்கி கொடுத்து மஞ்சள் குங்குமம் கொடுத்து சிறப்பு செய்தார்கள்.

காலை சிற்றுண்டி எல்லா குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் வழங்கப்பட்டது. காலை 8.30 மணி முதல் திருச்சி யோகாச்சார்யார் சந்திரசேகர் ஜி 130 பெண் குழந்தைகளுக்கும், விளையாட்டின் மூலம் பாரதப் பண்பாட்டை விளக்கிச் சொன்னார்கள். குழந்தைகளும் மிக ஆசையாக பங்கெடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். காலை 10.00 மணி முதல் டாக்டர்.சுதா சேஷையன் குழந்தைகளுக்கு நல்வழிகாட்டினார்கள். அத்யாவஸ்யமான ஸம்ஸ்காரங்களும், பண்புகளும் சொல்லிக் கொடுத்தார்கள். அம்மாவின் கருத்துரை மிக மேன்மையாக அமைந்தது. அம்மாவின் எளிமை எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது.

அமர்வு 3ல் குழந்தைகள் 3 வகுப்புகளாக பிரிந்து வேதபாரதி மென்டார்ஸ் சுபஸ்ரீ, மீரா, ஆர்த்தி குழந்தைகளுக்கு நம் பாரம்பர்யம், நம் எதிர்காலம் கலாச்சார அவசியம் குறித்து வகுப்புகள் நடத்தினார்கள்.

சுழற்சிமுறையில் பெரியவர்களுக்கு ஸ்ரீ சந்திரசேகர், ஸ்ரீராமகிருஷ்ணன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் சிறப்பு விரிவுரையாளர் ஸ்ரீமதி பூர்ணிமா மிக அழகான முறையில் தனது கருத்துக்களை பதிவு செய்தார்கள்.

எல்லா குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது. உணவுக்குப்பின் குழுவாக வந்த குழந்தைகள் வரிசைப்படி சாதனையாளர்கள் குறித்த Powerpoint Presentation னும், பாராட்டும், எல்லா குழந்தைகளுக்கும் பரிசும் பாராட்டு மழையும் தெரிவிக்கப்பட்டது. 3.30 மணிக்கு நிகழ்ச்சி குறித்து கருத்துக் கேட்பும், பூர்த்தி பாடல் ஸ்ரீ சந்திரசேகர் வழங்க நிறைவுபெற்றது.

மறைமலை நகர் ஸ்ரீமதி மஹாலட்சுமி, குரோம்பேட்டை புவனா கார்த்திக் முயற்சி பெரும் பாராட்டுக்குரியது. ஸ்ரீமதி மகாலட்சுமி தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தி, குழந்தைகளை சேர்த்தல், குழந்தைகளை பற்றி தொகுப்பு மிகச்சரியாக வருவதற்கு பெரும் பங்காற்றினார்கள். ஸ்ரீமதி உமா ரவிசங்கர் உற்சாகத்துடன் குழந்தைகளை சேர்த்துக் கொடுத்தார்கள். கீழ்கண்டவர்கள் பெண்குழந்தைகளுக்கு நமது பண்பாட்டு விஷயங்களை வகுப்பாக நடத்தி கொடுத்தார்கள்.

செல்வி ஆர்த்தி, செல்வி.சுபஸ்ரீ, ஸ்ரீமதி பிரியா ஷ்யாம் – ஒருங்கிணைப்பாளர்.

ஸ்ரீமதி பூர்ணிமா மற்றும் ஹாசினி : ஸ்ரீவித்யா – ஒருங்கிணைப்பாளர்

ஸ்ரீமதி மீரா நாராயணன் – அமிர்தவர்ஷினி, ஜெயஸ்ரீ, ஸ்ரீமதி புவனா ஒருங்கிணைப்பாளர்.

அடுத்தமாதம் கட்டுரை தொடரும்..

உ

**ஸந்த்யா வந்தன முகாம்**

*நாள் : மே 16,17,18 வெள்ளி, சனி, ஞாயிறு*

இடம் :

**ஜானகி அம்மாள் ஆடிட்டோரியம்**

APL குளோபல் பள்ளி வளாகம்,

துரைப்பாக்கம்

உபநயனமான அந்தண சிறுவர்கள், பெரியவர்கள் கலந்து கொள்ளலாம். உணவு, உறைவிடம் ஏற்பாடு உண்டு. எல்லா சாகைகளுக்கும் ஆசிரியர் உண்டு.

மேலும் தொடர்புக்கு :

Whatsapp No. 9840201625 / 70101 88571

**அன்புடன் அழைக்கும்**

வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை

உ

**கோடி காயத்ரீ ஜப யக்ஞம்**

*நாள் : 25.05.2025, ஞாயிற்றுக்கிழமை*

இடம் :

**லக்ஷ்மி நடராஜன் வித்யா நிகேதன் பள்ளி**

ராஜாஜி தெரு, கரூர்

*செல் : 9443766998 / 9003920121 / 98430 56049*

*98403 56049 / 70101 88571 / 9443453053*

**அன்புடன் அழைக்கும்**

வேதபாரதி, கரூர்

*நிகழ்ச்சிகள் காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும்*

**குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும்**

**ஸ்லோக வகுப்புகள் ஆன்லைன் மூலமாக**

சிறியவர்களுக்கு ஸ்ரீ குரு பாதுகா ஸ்தோத்திரம்

பெரியவர்களுக்கு ஸ்ரீ வேங்கடேச கராவலம்பம்

*ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,*

*ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை*

தொடர்புக்கு : **9443489129**

வைத்தியநாத ஸ்வாமி துணை

# மாத்ருபக்தி ஸ்ராத்த ஸ்தலா
# பள்ளிக்கரணை

ஜீவதோர் வாக்கிய கர்ணாத்
ப்ரத்யப்தம் பூரி போஜானாத்
கயாயாம் பிண்ட தானேஸ்ச
திரிபி : புத்தரஸ்ய புத்த்ரதா

அனைவருக்கும் நமஸ்காரம் / ஆசீர்வாதம் ஸ்ரத்தையாக
செய்யும் காரியங்கள் காரியசித்தியையும் நல்ல
மங்களத்தையும் கொடுக்கும்.
பள்ளிக்கரணையில் அற்புதமான ஓர் ஸ்தலம்
நமது முன்னோர்களுக்கான ச்ராா்தம் செய்துகொள்ள
தங்கள் வாத்தியாரை வைத்துக் கொண்டு
எங்கள் இடத்தில் செய்து கொள்ளலாம்.
வாத்தியார் இல்லாத பட்சத்தில் அதுவும் ஏற்பாடு
செய்து தரப்படும். சாஸ்திரோக்தமாய் செய்து தரப்படும்.
அனைத்து வசதிகள் உள்ளன என்பதை
வேதமாதா ஆசீர்வாதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி!!!

**V.கணேஷ் வாத்தியார்**
எண்.18, பரசுராம் நகர் குறுக்கு தெரு, பள்ளிக்கரணை,
சென்னை - 600100.
**செல் : 90942 57006 / 73582 11982**

# *நீர், மோர் வழங்கும் நிகழ்ச்சி*

*வேதபாரதி செய்திகள் மற்றும் ரோட்டரி வேளச்சேரி சார்பாக ஏப்ரல் மாதம் 14-ம் தேதி முதல் மே மாதம் 31 வரை வேளச்சேரி, பேபிநகர், சேஷாத்ரிபுரம் சாலையில் பொதுமக்களின் தாகம் தீர்க்க தினமும் காலை 10.30 மணி முதல் நீர் மோர் வழங்கும் நிகழ்வு நடந்துகொண்டுள்ளது. இதற்கு உறுதுணையாக இந்திரா நகர் குடியிருப்பு சங்க தலைவர் ஸ்ரீ குமாரராஜா, வேளச்சேரி ரோட்டரி தலைவர் ஸ்ரீ* Rtn. *பாலசந்தர் குடும்பத்தினர் உதவியுடன் மிகச் சிறப்பாக நடந்து கொண்டுள்ளது.*

*மேலும் தொடர்புக்கு : 70101 88571 / 91768 77442*

# *சித்த மருத்துவ முகாம்*

*வேதபாரதி செய்திகள் சார்பாக ஏப்ரல் மாதம் 19-ம் தேதி சனிக்கிழமை ஸ்ரீ சங்கரவித்யாலயா பள்ளி, ஊரப்பாக்கம் வளாகத்தில் சித்த மருத்துவ முகாம்* Dr.*ஸ்ரீதர்,* BSMS, M.Sc., Ph.D., (Siddha), Principal Research Investigator *பயனாளர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள் வழங்கி, மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பயனடைந்தார்கள். இந்நிகழ்ச்சிக்கு உறுதுணையாக இருந்து மிகப்பெரும் சேவை செய்த சேலம்* Dr.*ஸ்ரீதர் அவர்களை மனதார பாராட்டுகிறோம்.*

## கோடி காயத்ரீ ஜப யக்ஞம், ஒசூர்

*29.06.2025, ஒசூர் நகரில் இந்த ஆண்டு கோடி காயத்ரீ ஜப யக்ஞம் நடைபெற உள்ளது. கலந்துகொள்ள விருப்பம் உள்ள அந்தணர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் :*


*ஸ்ரீபாபு - 94436 34283, ஸ்ரீ வைத்யநாதன் - 95903 35251*

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.

Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071

Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம் அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்

*இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்*

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

*என்பது சாஸ்த்ர வசனம்*


*பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.*

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. *அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்*
2. *கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.*
3. *நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.*
4. *மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்*

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
CUB
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple·seamless·secure
IDRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

Posted at Egmore, RMS, Patrika Channel, Chennai - 8.
RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted between 1 - 7th May 2025

## மரம் வளர்ப்போம் இயற்கையை காப்போம்



## நம் தலைமுறை நம்மை போற்றட்டும்

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி ....
சூர்யா ஜுவல்லர்ஸ்®
287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829
97862 41829 www.suryajewellers.co.in

To

____________________

____________________

____________________

____________________

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.